# அடையாள அட்டையின் ஆபத்தை மன்னார் சம்பவம் காட்டிவிட்டது


Registered as a News paper in Ceylon விலை சதம் 15

★★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

மலர் 11
இதழ்: 345
தேசிய தினசரி

தபால் பெட்டி எண் 49
போன்: 389

யாழ்ப்பாணம் தை 11 ஜூலகஸ் 15 சனிக்கிழமை [24-1-70]



உங்களுக்குத் தேவையான
தங்க, வைர நகைகளுக்கு
பொ. அம்பலவாணா
தங்க, வைர நகை வியாபாரம்
119, கஸ்தூரியார் ரேட்,
யாழ்ப்பாணம்.
போன்: 7119 தந்தி: வைரம்


## புங்குடுதீவில் தீவுப்பகுதி எம். பி.

(நமது ஊரதீவு நிருபர்)

''அடையாள அட்டையின் ஆபத்தை நான் எடுத்துக்கூறி இரண்டொருவருடமாகவில்லை. ஆனால் அதற்கிடையில் தமிழினம் அடையாள அட்டையின் ஆபத்தை உணரக்கூடிய சம்பவம் நிகழ்ந்துவிட்டது. மன்னார் தாழ்வுப்பாடு கிராமத்தில் நடைபெற்ற அசம்பாவிதங்களுக்கு அடையாள அட்டை முறையே காரணமாக இருந்ததென்று அறியப்படுகிறது. இதன் காரணமாக ஒரு கிராமம் அழிவுற்று, சமயப் பண்டிகையைக்கூடக் கொண்டாட முடியாதநிலை ஏற்பட்டது என்றால் பூரணமாக அமுல் நடத்தப்பட்டபின் இலங்கைத் தமிழர்களின் கதி என்னவென்பதை நாம் எண்ணிப்பார்க்கவேண்டும்''

இவ்வாறு புங்குடுதீவு ஊரதீவில் நடைபெற்ற கட்சிப்பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் தமிழர் சுயாட்சிக்கழகத் தலைவரும், தீவுப்பகுதி எம். பி.யுமான திரு. வி. நவரத்தினம் கூறினார்.

புங்குடுதீவு கி. ச. உறுப்பினர் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்திற்கு முன்னர் திரு. நவரத்தினமும், திருமதி நவரத்தினமும் ஊரதீவு இளந் தமிழர் மன்ற மண்டபத்திலிருந்து ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர்.

திரு. வி. நவரத்தினம் எம் பி. மேலும் பேசுகையில் தெரிவித்ததாவது:

''சகல மக்களுக்கும் பொதுவானதென்ற போர்வையில் இச்சட்டம் வந்தாலும் இது தமிழர்களைத்தான் பாதிக்கும். தமிழ்ப் பெயருடைய ஒருவரைப் பார்த்துத்தான் அடையாள அட்டை எங்கேயென்று கேட்பார்களே தவிர, சிங்களப்பெயருடைய ஒருவரைக் கேட்கமாட்டார்கள்: இதை எமது தமிழ்ப் பிரதிநிதிகள் உணராமல் விட்டது கவலைக்குரியது.

## 'சிங்கள ஆசிரியரை தீவுப்பகுதியில் அனுமதியேன்'

காங்கேசன்துறைத் துறைமுகம் அபிவிருத்தி செய்வதற்குரிய அத்திபாரக்கல் இடப்பட்ட அடுத்ததினமே காங்கேசன்துறையில் சிங்களப்பாடசாலை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது இதற்கு முன்பும் பாடசாலைகள் வடபகுதியில் ஆரம்பிக்கப்பட்டுவிட்டன ஆனால் எனது தொகுதியில் எந்தவொரு சிங்களப் பாடசாலை அமைக்கவோ பாடசாலைகளில் சிங்கள ஆசிரியர்களை நியமிக்கவோ அனுமதிக்கமாட்டேன் என்று கூறினார்

வேலணை கிராமசபைத் தலைவர் திரு சதாசிவம், முன்னாள் நெடுந்தீவு கி ச தலைவர் திரு ம கணபதிப்பிள்ளை, உரும்பராய் ப ச உறுப்பினர் திரு மு சி கனகசுந்தரம், த நவரத்தினசிங்கம், பொ வைத்திலிங்கம், திரு இராசதுரை உட்பட பலர் பேசினர்

## பனைஓலை இத்தாலிக்கு ஏற்றுமதி

கொழும்பு, வெள்ளி

இலங்கையிலிருந்து பனை ஓலையை இறக்குமதி செய்வதற்கு இத்தாலி அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இது சம்பந்தமாக இத்தாலி அரசாங்கம் இலங்கையுடன் தொடர்புகொண்டுள்ளது.

இலங்கைப் பனைஓலைக்குப் பதிலாக மயில் இறகுகளை இலங்கைக்கு வழங்க இத்தாலி ஆலோசித்துள்ளது, விரைவில் இதற்கான ஒப்பந்தம் நடைபெறலாமென சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

### 'யாழ்ப்பாணத்தில்

# பல்கலைக்கழகம் நிறுவாவிட்டால் அரசியலைத் துறப்பேன்'

## காங்கிரஸ் மகாநாட்டில் ஜி. ஜி.

(நமது அலுவலக நிருபர் கா. யோகநாதன்)

சாவகச்சேரி, வெள்ளி

**யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகம் நிறுவப்படாவிட்டால் நான் அரசியலைத்துறப்பேன் என்று தமிழ் காங்கிரஸ் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம், காங்கிரஸ் மகாநாட்டையொட்டி நேற்றிரவு இங்கு நடந்த பகிரங்கக் கூட்டத்தில் கூறினார்.**

சாவகச்சேரி தாமோதரம்பிள்ளை அரங்கில் வழக்கறிஞர் திரு. எஸ். சரவணமுத்து தலைமையில் நடந்த இக் கூட்டத்தில் திரு. பொன்னம்பலம் மேலும் கூறியதாவது: யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகம் நிறுவும் விஷயத்தில் ஒரே ஒரு அரசியல் கட்சிதான் முட்டுக்கட்டை[illegible] அதுவும் [illegible] அரசியல் கட்சியென்பது வருத்தத்திற்குரிய விஷயம்.

[illegible] பல திட்டங்கள் நிறைவேற்றப்பட்டது. 1956-ம்ஆண்டுக்குப்பின்தான் தமிழர்கள் தங்கள் உரிமைகளை ஒவ்வொன்றாக இழக்கத் தொடங்கினார்கள் 56-ம் ஆண்டுக்குப்பின்னர் தமிழ்ப்பகுதியில் எவ்வித அபிவிருத்தி திட்டங்களும் நடைபெறவில்லை.

திரு. வி. குமாரசாமி பேசும்போது கூறியதாவது: நமது தலைவர் மந்திரியாக இருந்தபொழுது [illegible] பட்டுள்ளது. இதேபோல் இன்னும் நூற்றுக்கணக்கான திட்டம் அரைகுறையாக இருக்கிறது. இத் திட்டங்கள் நிறைவேற்றப்படவேண்டுமானால் இம்முறை தமிழ்க்காங்கிரஸ் உறுப்பினர்களைகூடுதலாக தெரிவு செய்யவேண்டும்.

### உபசபாநாயகர் பேச்சு

உபசபாநாயகர் திரு எம் சிவசிதம்பரம் பேசும்போது தமிழ்மக்கள் ஒன்றுபட்டு [illegible]

யாழ், மாநகரசபையில்

## எதிர்க்கோஷ்டிக்கு நான்கு பிரேரணைகளிலும் வெற்றி

### உறுப்பினர் ஒருவர் வெளிநடப்பு

யாழ்ப்பாணம், சனி

நேற்று நடைபெற்ற மாநகரசபைக் கூட்டத்தில் நிதிக் குழு, மராமத்துக் குழுத் தெரிவில் எதிர்க்கோஷ்டியினர் கொண்டு வந்த பிரேரணைகளே நிறைவேறின. இரு பிரேரணைகளிலும் ஆளும் கட்சியினருக்குத் தோல்வி கிடைத்ததால் ஆளும் கோஷ்டியைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவர் வெளிநடப்புச் செய் [illegible] கோஷ்டியைச் சேர்ந்த திரு. தம்பு கந்தையாவும், மற்ற 5 பேர்களை ஆளும் கோஷ்டியைச் சேர்ந்த திரு. என். அந்தோனிப்பிள்ளையும் பிரேரித்தனர். ஆனால் வாக்கெடுப்பின்பின் எதிர்க்கோஷ்டியினர் பிரேரித்த 5 உறுப்பினர்களே நிதிக்குழுவிற்குத் தெரிவுசெய்யப்பட்டனர். இச்சந்தர்ப்பத்திலேயே திரு. அந்தோனிப்பிள்ளை வெளிநடப்புச் செய்தார்.

திரு. அல்பிரட் துரையப்பாவும், மற்ற 5பேரை ஆளும் கோஷ்டியைச் சேர்ந்த திரு. ரி. கே. ராஜரத்தினமும் பிரேரித்தபோதும் எதிர்க்கோஷ்டியினர் பிரேரித்தவர்களே மராமத்துக்குழுவிற்குத் தெரியப்பட்டனர்.

மின்சாரக் குழுவிற்கும், சுகாதாரக் குழுவிற்கும் எதிர்க்கோஷ்டியினர் பிரேரித்த பெயர்கள் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட் [illegible]

## 'கொடிகாமம் தனித் தொகுதியாக வேண்டும்''

### முன்னாள் எம். பி. யின் விருப்பம்

கொடிகாமம், வெள்ளி

குடியேற்றத் திட்டங்களை ஆரம்பித்து 4000 குடும்பங்களை குடியேற்றி கிளிநொச்சி தொகுதியை உருவாக்கினேன். அதேபோல் கொடிகாமமும் ஒருதனித்தொகுதியாக வரவேண்டும் என்பது என்விருப்பம். [illegible] வும் அதனை நிறைவேற்ற முயற்சி எடுப்பதாகவும் அவர் மேலும் கூறினார்.

உபசபாநாயகர் திரு. எம். சிவசிதம்பரம் பேசும்போது இங்குள்ளது வாலிபர்களின் ஆர்வம் மற்றத் தொகுதிகளிலும் தமிழ்க்காங்கிரஸ் வெற்றிபெறும் என்று கூறி [illegible]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறுன் ... இரு பிரேரணை ... களிலும் ஆளும் கட்சியின ருக்குத் தோல்வி கிடைத்த தால் ஆளும் கோஷ்டியைச் சேர்ந்த உறுப்பினர் ஒரு வர் வெளிநடப்புச் செய் தார்.

நிதிக்குழு உறுப்பினர் களாக 5 பேரை எதிர்க் கோஷ்டியினர் பிரேரித்த 5 உறுப் பினர்களே நிதிக்குழுவிற் குத் தெரிவுசெய்யப்பட்ட னர். இச்சந்தர்ப்பத்திலேயே திரு. அந்தோனிப்பிள்ளை வெளிநடப்புச் செய்தார்.

இதேபோல மராமத்துக் குழுவிற்கும் 5 பேர்களை எதிர்க்கோஷ்டியைச்சேர்ந்த வர்களைத் ... மின்சாரக் குழுவிற்கும், சுகாதாரக் குழுவிற்கும் எதிர்கோஷ்டியினர் பிரே ரித்த பெயர்கள் ஏகமன தாக ஏற்றுக் கொள்ளப்பட் டது.

கலரியில் வரியிறுப்பாளர் கள் நிரம்பியிருந்தனர்.

# மேயரை இறக்கும் சக்தி எங்களிடம்தான் உண்டு

யாழ்ப்பாணம், சனி

'மேயரை இறக்கும் சக்தி எங்களிடம் மட்டுந்தான் உண்டு. அது உங்கள் கோஷ் டியிடம் இல்லை' என்று நேற்று நடந்த மாநகர சபைக் கூட்டத்தில் பேசும் போது திரு. என். அந்தோ னிப்பிள்ளை கூறினர். அச் சமயம் முன்னுள் மேயர் திரு ஏ ரி துரையப்பா 'பந் தயம் பிடியுங்கோ; நாங்கள் மேயரை இறக்கமாட்டோம் என்று கூறினர்.

யாழ்ப்பாண மாநகரசபைக் கூட்டம் நேற்று மாலை மேயர் திரு.எஸ்.நடராசா தலைமையில் நடைபெற்றது.

திரு. கே. எஸ். நடராசா பேசிக்கொண்டிருந்த சமயம் திரு. அந்தோனிப்பிள்ளை குறுக்கிட்டுப் பேச முயன் ருர். உடனே திரு. கே. எஸ். நடராசா, 'நீங் கள் 10 பேர் இருந்தும் கூட டால், உங்களுக்குத்தான் பேச உரிமையுண்டென்று அர்த்தமல்ல. எங்களுக்கும் பேச உரிமையுண்டு நாங் கள் மேயருக்கு உதவிசெய் யவே இருக்கிறோம். முட்டுக் கட்டைபோட இருக்க வில்லை'' என்று சொன்னர்.

# இராணுவ சார்ஜன்டுக்கு காயம் எப்படி வந்தது?

## பொலிஸ் புலன் விசாரணை

யாழ்ப்பாணம், சனி

இராணுவ சார்ஜன்ட் ஒருவரது கையில் ஏற்பட்டி ருக்கும் புதுமையான காயம் தமைமன்னரை பொலிசா ரைப் பெரும் அதிர்ச்சிக் குள்ளாக்கியுள்ளது.

இரத்தின பாலா என்ற இராணுவ சார்ஜன்டே இவ் வாறு கையில் பலத்த காய த்துடன் மன்னர் ஆஸ்பத் திரியில் அனுமதிக்கப்பட் டுள்ளார்.

சோடா உடைக்கும் போது போத்தல் வெடித்து கையில் காயங்கள் ஏற்பட்ட தாக இராணுவ சார்ஜன்ட் தெரிவித்துள்ளார்.

கைக்குண்டு, எறிகுண்டு கள் வெடிப்பதால் ஏற்ப டும் காயங்கள் போல இவ ருடைய கையில் ஏற்பட் டுள்ள காயமும் இருப்பதா கச் சந்தேகம் எழுப்பப்பட் டுள்ளது.

பொலிஸ் தலைமைக்காரி யாலயம் இவ்விசாரணையை மேற்கொண்டுள்ளது. சில இராணுவ உத்தியோகஸ்தர் களும் விசாரணைக்குட்படுத் தப்பட்டுள்ளதாகத் தெரி கின்றது. (கா, நி)

**யாழ். ஆஸ்பத்திரி**

# காவலாளியைத் தாக்கிய 4 பேரில் சட்ட நடவடிக்கை?

யாழ்ப்பாணம், சனி

ஆஸ்பத்திரி காவலாளி ஒருவரை வெளியார் நால் வர் தாக்கிய சம்பந்தமாக சுகாதார இலாகா அதிகாரி கள் செய்த புகாரைத் தொடர்ந்து பூர்வாங்க விசாரணை இப்போது நடை பெறுகின்றது.

இதே சமயத்தில் குறிப் பிட்ட காவலாளி புகார் செய்யச் சென்றபோது மற் ருெரு புகார் சம்பந்தமாக அவரைப்பொலிஸ்பாதுகாப் பில் வைத்ததற்கு ஆஸ்பத் திரிஊழியர் சங்கம்சுகாதார இலாகாவுக்கும், பொலிஸ் உயர் அதிகாரிக்கும் கண்ட னம் தெரிவித்து கடிதம் அனுப்பிவைத்துள்ளது.

குறிப்பிட்ட காவலாளி யைத் தாக்கியவர்கள்மீது சட்டநடவடிக்கை எடுக்கு மாறு வடபகுதி பொலிஸ் தலைமைக் காரியாலய அதி ...

4-ம் பக்கம் பார்க்க

# தேசிய சுவீப் முடிவுகள்

கொழும்பு, சனி

நேற்றிழுக்கப்பட்ட 282 வது தேசிய சுவீப்முடிவுகள் விபரம் வருமாறு:-

முதலாவது பரிசு
40 L 0305 ரூ 100,000

இரண்டாவது பரிசு
15 Q 0135 ரூ.40,000

மூன்ருவது பரிசு
07 O 0601 ரூ 10,000

தலா 328ருபா 30சதம் பெறும் 100 டிக்கட்டுகள்:-

| | |
|---|---|
| 09 F 0656 | 07 W 0199 |
| 24 K 0064 | 38 D 0472 |
| 16 X 0532 | 22 N 0637 |
| 07 R 0486 | 19 J 0529 |
| 23 P 0948 | 03 P 0063 |
| 07 Y 0863 | 35 N 0757 |
| 18 V 0084 | 17 E 0294 |
| 36 E 0727 | 10 W 0691 |
| 19 X 0175 | 33 K 0440 |
| 06 D 0136 | 13 J 0750 |
| 39 O 0301 | 13 B 0371 |
| 17 Y 0571 | 31 V 0491 |
| 36 B 0741 | 19 F 0450 |
| 12 W 0365 | 32 N 0989 |
| 36 O 0177 | 07 U 0919 |
| 44 L 0478 | 12 U 0810 |
| 34 B 0666 | 15 H 0360 |
| 17 J 0587 | 16 D 0530 |
| ?3 Q 0587 | 27 H 0591 |
| 21 Y 0556 | 40 Z 0354 |
| 37 Q 0984 | 16 Z 0834 |
| 26 Z 0412 | 13 J 0498 |
| 05 V 0959 | 03 T 0912 |
| 33 N 0473 | 25 Y 0802 |
| 14 R 0782 | 03 O 0876 |
| 24 U 0724 | 40 G 0810 |
| 42 Y 0437 | 30 A 0626 |
| 26 B 0044 | 21 E 0535 |
| 11 R 0137 | 22 F 0354 |
| 41 V 0527 | 32 E 0373 |
| 17 Q 0911 | 36 V 0827 |
| 29 R 0571 | 06 O 0413 |
| 42 G 0496 | 36 Y 0893 |
| 41 H 0362 | 12 X 0371 |
| 28 Q 0734 | 11 J 0814 |
| 20 P 0720 | 08 L 0577 |
| 10 U 0646 | 10 V 0316 |
| 01 J 0709 | 22 V 0142 |
| 03 L 0387 | 14 X 0780 |
| 08 K 0090 | 21 D 0691 |
| 29 X 0732 | 01 V 0265 |
| 18 O 0151 | 01 Q 0910 |
| 42 S 0378 | 12 H 0702 |

( 4-ம் பக்கம் பார்க்க)

...யத்தில் ஒரே ஒரு அர சியல் கட்சிதான் முட்டுக் கட்டையாக இருக்கிறது. அதுவும், அது தமிழ் அரசி யல் கட்சியென்பது வருத் தத்துக்குரிய விஷயம்.

... வருடங்களுக்குமுன்னரே நிறுவப்பட வேண்டிய இந் தப் பல்கலைக்கழகம் ஒருகட் சியின் முட்டுக்கட்டையால் தடைப்பட்டு வருகிறது. சிறிமா அரசாங்கமும் கூட்டு அரசாங்கமும் தேசிய அர சாங்கமும் பல்கலைக்கழக த்தை யாழ்ப்பாணத்தில் நிறுவுவதற்காக ஒவ்வொரு வருடமும்வரவுசெலவுத்திட் டத்தில் அடையாளமான் யம் ஒதுக்கிவந்துள்ளது. இராமநாதன் பல்கலைக்கழ கத்திற்கு அடையாளமான் யம் ஒதுக்கப்பட்ட வரவு செலவுத்திட்டத்தை சமஷ் டிக்கட்சியினரே ஆதரித்து வாக்களித்துள்ளார்கள்.

## 65 லேயே நிறுவியிருப்போம்

65-ம் ஆண்டு தேர்தலில் தமிழ் மக்கள் தமிழ் காங் கிரஸ் பிரதிநிதிகளை கூடுத லாக ஆட்சிமன்றத்திற்கு அனுப்பியிருந்தால் 65-ம் ஆண்டே யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகம் நிறுவப்பட் டிருக்கும் தமிழ் மக்கள் விட்ட இந்தத்தவறினால்யாழ் ப்பாணத்தில் உள்ள எத்த னையோ பல்கலைக்கழக மாண வர்கள், கொழும்பிலும், பேராதனையிலும் கஷ்டப் படுகின்ருர்கள் எதிர்வரும் தேர்தலில் தமிழ் பேசும்மக் கள் சரியான பாதையில் செல்வார்கள் என்ற நம்பி க்கை, இந்தமாபெரும் கூட் டத்தை பார்த்த பின் ஏற் பட்டிருக்கிறது.

சிங்கள மக்களில் ஒருவர் கூட, யாழ்ப்பாணத்தில் பல் கலைக்கழகம் நிறுவப்படு வதை எதிர்க்கவில்லை. ஆட் சிமன்றத்தில் முஸ்லீம் களு க்கு பல்கலைக்கழகம் நிறுவ வேண்டும் என்ற தீர்மான த்தை நான் ஆதரித்தேன். இதே போல் மற்றும் சிறு பான்மை மதத்தினருக்கு பல்கலைக்கழகம் நிறுவ முய ற்சி எடுக்கப்பட்டால் நான் ஆதரிப்பேன்.

## 47-ம் ஆண்டு நினைவுவருகிறது

இப்பெரும் கூட்டத்தை பார்க்கும் போது எனக்கு 47 ம் ஆண்டு நினைவுவரு கிறது தமிழ்மக்கள் சரியான பாதைக்குவந்து விட்டார் கள் என்பதை இதுஎடுத்துக் காட்டுகிறது 47-ம் ஆண்டு முதல் 56-ம் ஆண்டு வரை, தமிழுக்கு, சிங்களத்துடன் சமஅந்தஸ்து இருந்துவந் தது தமிழ் மக்களுக்கு சிங் களவர் மத்தியில் மதிப்பு இருந்தது தமிழ்ப் பகுதியில், திட்டங்களும் நடைபெற வில்லை.

திரு. வி. குமாரசாமி பேசும்போது கூறியதாவது: நமது தலைவர் மந்திரியாக இருந்தபொழுது ...ார் 14 வருடங்களுக்கு முன்னர் சாவகச்சேரி உப்பள அபி விருத்திக்கான முயற்சி எடுக்கப்படடு நிபுணர்கள் வரவழைக்கப்படடு ஆரா ய்ச்சிசெய்யப்பட்டது. தேசிய அரசாங்கம் அமைக்கப் படடபின்னர். நமது தமிழ ரின் பெரும் முயற்சியால் அரசாங்கம் இத்திட்டத் திற்கு 10 கோடி ரூபா ஒது க்கியுள்ளது.

## 49-ல் காங்கேசன் துறைமுக தீர்மானம்

காங்கேசன் துறைமுகஅபி விருத்தி வேலைக ளு கரு 1949-ம் ஆண்டு நான் இருந்தபொழுது ஆட்சிமன்றத்தில் தீர் மானம்கொண்டுவந்து அத் திட்டத்திற்கு அடையாள மான்யம் ஒதுக்கச்செய் தேன். தேசியஅரசாங்கம் இத் திட்டத்தை நிறை வேற்றுவதற்கான ஒழுங்கு களை செய்துவருகிறது. நமது தலைவர் தேசிய சேவை மந்திரியை வற்புறுத் தியதன் காரணமாகவே இத் திட்டம் ஆரம்பிக்கப் ...

... செய்யவேண்டும்.

## உபசபாநாயகர் பேச்சு

உபசபாநாயகர் திரு எம் சிவசிதம்பரம் பேசும்போது தமிழ்மக்கள் ஒன்றுபட்டு அடுத்த தேர்தலில் ஒரே கட்சியை ஆடசிமன்றத் திற்கு அனுப்பினுல் இழந்த உரிமைகளை பெறுவதோடு தமிழ்ப்பகுதிகளையும் அபி விருத்திசெய்யலாம் என்று கூறினர்.

வவனியா எம். பி திரு ரி சிவசிதம்பரம் பேசும்போது மக்கள் மத்தியில் மாற்றம் ஏற்பட்டிருக்கிற தென்பதை இக்கூடடம் எடுத்துக்காடடு கிறதென்றும் இந்த மாற் றத்தை வாலிபர்கள நன்கு

(4-ம் பக்கம் பார்க்க)

... களை குடியேற்றி கிளிநொச்சி தொகுதியை உருவாக்கி னேன். அதேபோல் கொடி காமமும் ஒருதனித்தொகுதி யாக வரவேண்டும் என்பது என்விருப்பம்.

கொடிகாமம் சந்திக்கு அருகில் காங்கிரஸ் மகா நாட்டையொட்டி நடந்த வரவேற்பு கூடடத்தில் திரு. வி. குமாரசாமி பேசும் போது மேற்கண்டவாறு கூறினர்.

திரு. ஆ. கனகரத்தினம், தலைமையில் நேற்று நடந்த இக்கூடடத்தில்இப்பகுதிக்கு நல்ல தண்ணீர் திடடத் திற்கு பணம் ஒதுக்கப் படடு இன்னும் அது நிறை வேற்றப்படாமலிருப்பதாக உபசபாநாயகர் திரு. எம். சிவசிதம்பரம் பேசும்போது இங்குள்ளது வாலிபர்களின் ஆர்வம் மற்றத் தொகுதி களிலும் தமிழ்க்காங்கிரஸ் வெற்றிபெறும் என்று கூறி ஞர்.

வவுனியா எம். பி. திரு. ரி. சிவசிதம்பரம் பேசும் பே து இங்குள்ள நூற்றுக் கணக்கான பூரண கும்பங் களைக் கொண்டு மாற்றம் ஏற்படடுவிட தென்பதை அறிந்துகொண்டதாக கூறி ஞர்.

திருவாளர்கள்: வீ. ஆனந் தசங்கரி, எம். மோதிலால் நேரு, என். நடராசா ஆகி யோரும் பேசினர்கள்.

**பயங்கர ஆயுதங்களுடன்**

# லொறியில் சென்ற கோஷ்டியினர் டாக்ஸியில் சென்றவரை தாக்கினர்

## மாங்குளம் காட்டில் சம்பவம்

யாழ்ப்பாணம், சனி

டாக்ஸியில் சென்ற ஒரு கோஷ்டியினரை லொறி ஒன்றில் சென்ற ஆயுதங்கள் தாங்கிய மற்ருெரு கோஷ்டி வழிமறித்துத் தாக்கியதாம்.

இச்சம்பவம் கடந்த இரவு மாங்குளம் காட்டில் நடை பெற்றதாக வடபகுதிப் பொலிஸ் தலைமைக்காரியா லயத்திற்குப் புகார்செய்யப் பட்டுள்ளது.

'பிஞன்ஸ்' கம்பெனிக்குப் பணம்செலுத்தாத'டாக்ஸி' ஒன்றை 'பிஞன்ஸ்' கம்பனி யினர் யாழ்ப்பாணத்திலிரு ந்து கொழும்புக்கு கொண்டு செல்கையிலேயே இத்தாக் குதல் சம்பவம் நடைபெற் றதாகப் பொலிசார் தெரி வித்தனர்.

டாக்ஸியில் சென்ற ஒரு வரது பணமும், கைக்கடிகா ரமும் பறிக்கப்பட்டதாக வும், தாக்குதலால் அவர் மண்டையிலும், கையிலும் காயமடைந்ததாகவும் பொலிஸில் தெரிவிக்கப்பட் டுள்ளது.

சந்தேகத்தின் பேரில் ஒரு வர் கைதுசெய்யப்பட்டுள் ளார். இரும்புக்கம்பிகள், பொல்லுகள் சகிதம் ஒரு கோஷ்டியினரை ஏற்றிச் சென்ற லொறியையும் மற் றும் சில சந்தேகநபர்களை யும் பொலிசார் தேடிவரு கின்றனர்.

யாழ்ப்பாணம் குற்றத் தடுப்பு பொலிஸ்பகுதியினர் விசாரணை செய்துவருகின்ற னர். (கா, நி.)

---

பண்டத்தரிப்பு, வெள்ளி

கிறிஸ்தவ சபைகளின் ஐக் கிய வாரம் இம்மாதம் 25-ம் திகதியுடன்முடிவடைகிறது. இதனை முன்னிட்டுக் கடந்த 18-ம் திகதியிலிருந்து கத் தோலிக்க தேவாலயங்களில் விசேட வேண்டுதல்களும், ஆராதனைகளும்நடைபெற்று வருகின்றன.

# தென்மராட்சியில் நடந்த ஆறு ஊர்வலங்கள்

சாவகச்சேரி, வெள்ளி

தமிழ் காங்கிரஸ் மகா நாட்டையொட்டி நேற்று தென்மராட்சியில் நடந்த 6 ஊர்வலங்களில், சுமார் ஆயிரக்கணக்கான வாலிபர் களும், நூற்றுக் கனக்கான மாட்டுவண்டிகள், டிராக் டர்கள், லொறிகள், கார்க ளும், சயிக்கில்களும் கலந்து கொண்டு, மகா நாட்டை சிறப்பித்தன.

கைதடியிலிருந்து திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் தலைமை யிலும், மட்டுவிலிலிருந்து திரு குமார்பொன்னம்பலம் தலைமையிலும், ஊர்வலங் கள் சாவகச்சேரியை வந்த டைந்தன.

வரணியில் ஆரம்பமான ஊர்வலத்தில் நூற்றுக்க ணக்கான மாட்டுவண்டிகள் கலந்துகொண்டன. இந்த ஊர்வலத்தில் உப சபாநாய கர் திரு எம். சிவசிதம்பரம், திரு எம் மோதிலால்நேரு, திரு என் நடராசா ஆகி யோர் வந்தனர்.

எழுதுமட்டுவாளில் ஆர ம்பமான ஊர்வலத்திற்கு திரு. வி, ஆனந்தசங்கரி தலைமைதாங்கினர்..

கச்சாய் அம்மன் கோவி லில் முன்னுள் சாவகச்சேரி எம் பி திரு வி குமாரசாமி தலைமையில் நேற்று பிற் பகல் 3 மணிககு ஆரம்ப மான ஊர்வலம், மாகா நாட்டு பந்தலை இரவு 10 மணிக்கு வந்தடைந்தது. சுமார் 10 மைல் தூரம் வந்த இந்த ஊர்வலமே பெரிய ஊர்வலமாக காட்சி யளித்தது.

வரணி, எழுதுமட்டுவாள், கச்சாய் ஊர்வலங்கள், கொடிகாமம் சந்திககுவந்து அங்கிருந்து சாவகச்சேரிக்கு புறப்பட்டன. கொடிகாமம் சந்தியில் வவுனியா எம். பி. யும் கலந்து கொண்டார்.

ஜனநெருக்கம் காரண மாக மாட்டுவண்டி ஊர்வ லம், சாவகச்சேரிக்கு வரு முன்னரே குறுக்குப் பாதை யினுல் பொலிஸாரால் திரு ப்பி விடப்பட்டது. மகா நாடடை யொடடி நள்ளி ரவு வாணவேடிக்கையும் இடம் பெற்றது.

ஊர்வலத்தில், காங்கேசன் துறை சிமெந்து தொழிற் சாலை, காங்கேசன்துறை துறைமுகம், மகாவலிகங்கை வடக்கே திரும்பும் காட்சி அத்துரு தன்ணீர் திட்டம் ஆகியவற்றின் மாதிரிப் படங்கள் இடம் பெற்றன.


# தேவை

## உதவியாசிரியர்கள்

'ஈழநாடு'. பத்திரிகை ஆசிரியர் குழுவில் கடமையாற்றுவதற்கு உதவி ஆசிரியர்கள் இருவர் தேவை. பத்திரிகைத் தொழிலில் அனுபவமும் மொழிபெயர்ப்பில் திறமையும் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. விண்ணப்பங்கள் இரகசியமாக வைக்கப்படும்.

பொதுமுகாமையாளர், 'ஈழநாடு',
த. பெ. எண் 49, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரிவிளம்பரம்

## விற்பனைக்கு

அம்பிலிபியருடன் கூடிய புது ஒலிபெருக்கி, இணைப்புகள் பொருந்திய எஸ்-லோன் பைப்புகளும் பெருமளவில் விற்பனைக்குண்டு. 20 வீதம் கழிவு தரப்படும். தொடர்பு கொள்க. க. வேலுப்பிள்ளை, மந்திகை, பருத்தித்துறை. 1780

நவீன ஜேர்மன் எந்திர சாதனங்களால் தயாரிக்கப்பட்ட திறமான ஒட்டக மார்க் செங்கற்கள் விற்பனைக்குண்டு. ஜெ செங்கல் ஓட்டுத் தொழிற்சாலை, சண்டாவளை. 1783

காணி:

குடியிருக்கவும், விவசாயத்திற்கும் உகந்த 110 பரப்பு வேலணை 'நாவலடிப்புலம்' காணி உடன் விற்பனைக்குண்டு. முத்து பாலுசூரியர், Tel 81471, கொழும்பு. உறுதி மற்றும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும். கே. ஞானச்சந்திரன், முடிக்குரிய வழக்கறிஞர், சாவகச்சேரி. 1782

3-ம் குறுக்குத் தெருவிலுள்ள 42-ம் இலக்க வசதியான வீடொன்று உடன் விற்பனைக்குண்டு விலை கோருவோர் விரும்பத்தக்கது. தொடர்பு கொள்க. மேதர் அல்லது மயில் வாகனம், 18 & 26 சப்பல் வீதி, யாழ்ப்பாணம். 1787

மிளகாய்க் கன்றுகள், மாஇலுப்பள்ளம உயரினம் உடன் விற்பனைக்குள்ளன. விலை ஒரு சதம். அ. சண்முகரத்தினம், படித்த வாலிபர் திட்டம், 2-ம் படிவம், வலதுகரை, ஒட்டுசுட்டான். 1781

## திருமண அழைப்பு

மாவிட்டபுரத்தைச் சேர்ந்த திரு. செல்லையா தம்பதிகளின் புதல்வன் சண்முகநாதனுக்கும் (கிராமப் பயிர் செய்கை உத்தியோகத்தர், நீர்கொழும்பு) மாவிட்டபுரத்தைச் சேர்ந்த திரு. கனகசபை (கலா ரேடிங் கம்பனி) தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரி திருநிறைச்செல்வி சாந்தசௌரிக்கும் 26-1-70 திங்கட்கிழமை காலை 9 — 11-30க்குமிடையில் வரும் சுபமுகூர்த்தத்தில் மணமகள் இல்லத்தில் நடைபெறும் திருமண வைபவத்தில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் எல்லோரையும் அழைக்கின்றோம். 1790

## தேவை

யாழ்ப்பாணத்திலுள்ள கிறிஸ்தவ வாலிபர் சங்கத்திற்கு ஒரு காரியதரிசி தேவை. சம்பளம் எல்லாம் உட்பட வருஷத்திற்கு ரூபா 3000/- — 6000/- (10 X 10, 10 X 15) விண்ணப்பப்படிவங்கள் பொதுக் காரியதரிசியிடம் பெற்றுக் கொள்ளலாம். முடிவு திகதி 15-2-70. 1785

ஆசிரியர்கள்:

விஞ்ஞான / கணித பாடங்கள் G. C. E. O/L, A/L வகுப்புக்களுக்கு கற்பிக்கக் கூடிய ஆசிரியர்கள் தேவை தராதரப்பத்திரங்களுடன் 29-1-70-ம் திகதி மாலை 2 மணிக்கு அதிபருடன் நேரில் தொடர்பு கொள்க. ஆனந்தா கலைக்கல்லூரி, சுன்னுகம். 1788

## கல்வி

அனுபவம் வாய்ந்த ஆசிரியர் ஒருவரால் ஜி. சி இ. சாதாரண வகுப்புக்கான ஆங்கில இலக்கிய வகுப்புக்கள் (English Literature) நடத்தப்படுகின்றன. சேர விரும்புவோர் விண்ணப்பிக்கவும் விளம்பர இலக்கம்: 1789, C/o 'ஈழநாடு', யாழ்ப்பாணம் 1789

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### சனி 24—1—70

செய்திகள்: காலை 6-45, 8-30.

பகல் 12-00, 12-45, 1-30.

மாலை 4-25, 5-00, 6-00.

இரவு 7-00, 8-00, 9-00, 10-30.

(8-ம் ...லத் தொடர்ச்சி

முத்துக்கிருஷ்ணன், மகாமாரி ச ச நி.

நாடகம்; மதிஒளி ச ச நிலையம் மண்டைதீவு, ஐயனுர் ச ச நிலையம் வேலணை, மகாமாரி ச ச நிலையம் புளியங்கூடல்.

கலை கலாசாரப் போட்டிகளின்போது மத்தியஸ்தர்களாக திருவாளர்கள் ஆசிரியர் எம் செல்லையா, மகாலிங்கம், தவவிநாயகம் (கி. ச. தலைவர், அல்லைப்பிட்டி) எம் விஜயரெட்ணம், அம்பலம் (கி ச தலைவர், நெடுந்...

# கேள்வி விளம்பரம்

## நகரசபை, பருத்தித்துறை

1970-ல் பின்வரும் பொருட்களை சப்ளை செய்வதற்கு பருத்தித்துறை நகரசபைத் தலைவரால் ஜனவரி 29-ம் திகதி நண்பகல் 12-00 மணிவரை சீல் வைக்கப்பட்ட கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கேள்விப்பத்திர விண்ணப்பங்கள் மாலை 3 மணிவரை (ஜனவரி 27 வரை பணம் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

| பொருள் | டெண்டர் 'டிபாஸிட்' | டெண்டர்பத்திர கட்டணம் |
|---|---|---|
| மின்சார உபகரணங்கள் 'சப்ளை' | ரூ. 250-00 | ரூ. 25-00 |
| எழுதுபொருட்கள் அச்சுகடதாசிகள் 'சப்ளை' | ரூ. 50-00 | ரூ. 10-00 |
| சுகாதார, வேலைப்பகுதி பண்டகசாலைக்கு சப்ளை | ரூ. 50-00 | ரூ. 10-00 |

வி. தர்மலிங்கம்,
தலைவர், நகரசபை,
நகரசபை அலுவலகம்,
பருத்தித்துறை.
18-1-70.

1924

# இன்றைய பலன்

## சோதிடக்கலாநிதி திருமலை க. வேலுப்பிள்ளை

தை மாதம் 11-ம் திகதி 24-1-70]

**மேஷம்**- தெய்வநம்பிக்கை மேலோங்கி நிற்கும். சிலருக்கு ஆத்மீக விடயங்களில் அதிக ஆர்வம் ஏற்படலாம் பொதுப்பணிகளில் ஈடுபடுவதன் மூலம் பொது மக்களின் ஆதரவைப் பெறுவீர்கள்.

**ரிஷபம்**- வியாபாரத்துறையில் ஈடுபடுபவர்கள் இன்று அதிக முதலீட்டை தவிர்த்துக்கொள்ளவும். எதிர்பார்த்த விடயத்தில் நஷ்டம் ஏற்படலாம். நண்பர்களாலும் தொல்லைகள் அதிகரிக்கும்.

**மிதுனம்**- கடமையில் புதிய ஆர்வம் பிறக்கும். சிலருக்கு பதவிஉயர்வும் ஏற்படலாம். வெளியிடத் தொடர்புகள் மூலம் செல்வாக்குப் பெருகும். நீண்டநாள் பிணக்குகள் இன்று நிவர்த்தியாகும்.

**கடகம்**- கருட்டபார்வை உங்களை வட்டமிடும் எதிர்பாராதவகையில் பொருட்செலவுக்கு இடம் உண்டு. தொழில்துறையில் சிறிது மனக்கசப்பு தென்படலாம். அதிக சிந்தனைக்கு இடம் உண்டு.

**சிம்மம்**- சுறுசுறுப்பு குன்றும். உமது சொந்த வாழ்க்கையில் மற்றவர்கள் தலையிடுவார்கள். குடும்பத்தில் சிறு பூசல்கள் தோன்றிமறையும். கொள்கையில் கோணலுடன் கோபமும் அதிகரிக்கும். அமைதி நன்று.

**கன்னி**- முன்னாள் ஆசிரியர் ஒருவர் உமது முன்னேற்றத்திற்கு வழிகாட்டுவார். அடக்கமான நடவடிக்கையின் மூலம் மற்றவர்களின் மனதைக் கவருவீர்கள். இறைநம்பிக்கை மேலோங்கும்.

**துலாம்**- குறைகேட்க நேரிடும் கடமையில் தடை தோன்றும். நஷ்டத்திற்கு இடம் உண்டு. நாவடக்கம் நன்று. உடல்நலிவு தோன்றும். பிணிக்கு இடம்கொடாது நடக்கவும்.

**விருச்சிகம்**- வேண்டிய அளவிற்கு இன்று வெள்ளிப் பணம் துள்ளும். மாதுருவழிப் பெருமைக்கு இடம் உண்டு. மனம்போல் யாவும் நடக்கும். இன்று கல்வியில் சிறப்பும் உறவினர் கொண்டாட்டமும் கிடைக்கும்.

**தனுசு**- வசதிகள் பெருகும். வாழ்க்கையும் வளமாகும். தொழில்துறையில் புதிய வெற்றிகள் கிடைக்கும். இன்று சுபநாள்.

**மகரம்**- இதயம் எரிமலையாகும். எதிரிகள் தாக்குவர். ஏமாற்றத்திற்கு இடம்உண்டு எனினும் இருள்சூழ்ந்தநிலையிலும் ஒளிக்கோடுகள் தென்படும், அதிக பேச்சை தவிர்த்து காரியத்தில் கண்வைக்கவும்

**கும்பம்**- களஸ்திரவழியால் மகிழ்ச்சிக்கு இடம் உண்டு. பிரிந்தவர்கள் மீண்டும் வாழ்க்கையில் இணைவர். காதலர்கள் வாழ்வில் தித்திப்பான சம்பவங்கள் நடைபெறும். புசிதிரவழியாலும் மகிழ்ச்சி உண்டு

**மீனம்**- விஷப் பரீட்சையின் மூ[illegible] விபரீதங்கள் விளை

# 8½ லட்சம் ரூபா செலவில் சுன்னுகத்தில்நவீன சந்தை

## அமைச்சர் பிரேமதாசா அடிக்கல் நாட்டுவார்

உடுவில், வெள்ளி

சுன்னுகம் மார்க்கட் விஸ்தரிப்புச் செய்யப்பட் விருக்கிறது வெகு விரைவில் நவீன முறையில் அமைந்த இரண்டு அடுக்குக்கட்டிட வேலைகள் ஆரம்பிக்கப்பட இருக்கின்றன.

தற்போதுள்ள சந்தையை விஸ்தரிப்புச் செய்யவும் நவீனமுறையில் இரண்டு அடுக்குக்கொண்ட கட்டிடத்தை அமைக்கவும் சுன்னுகம் பட்டினசபை மேற்கொண்ட முடிவை, உள்ளூராட்சி அமைச்சு ஏற்றுக் கொண்டுள்ளது.

மேற்படி கட்டிட ஆரம்ப அடிக்கல்லை இம்மாத இறுதியில் யாழ்ப்பாணம் வரவிருக்கும் உள்ளூராட்சி அமைச்சர் திரு. ஆர். பிரேமதாசா நாட்டி வைப்பார்.

இம்மாத இறுதியில் வரும் உள்ளூராட்சிஅமைச்சர் ஆர். பிரேமதாசாவுடன் அவரது நிரந்தரக் காரியதரிசிதிரு. ஈ. ஜி குணவர்த்தன. உள்ளூராட்சி ஆணையாளர் திரு. ஏச். டபிள்யூ. குணவர்த்தன. சிரேஷ்டகாரியதரிசி திரு. டபிள்யூ, பத்மநாதன் ஆகியோருடன் மற்றும் பல உள்ளூராட்சி உத்தியோகத்தர்களும் விஜயம் செய்யவிருக்கின்றனர்.

இவர்களை வரவேற்று இம்மாதம் 29-ம்திகதி மாலை சந்தைக்கட்டிடவேலைக்கான அத்திபாரக்கல்லை அமைச்சர் திரு. பிரேமதாசாமூலம் நாட்டுவிப்பது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

சுமார் எட்டு லட்சத்து முப்பத்தாறுயிரம் ரூபாசெலவில் நவீன மார்க்கட்கட்டப்படவிருக்கிறது. கட்டட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டதும் அரசாங்கத்திடமிருந்து மேலும் நிதி உதவி பெறப்படவிருப்பதாக தெரிகிறது.

அமைச்சரையும் மற்றும் உத்தியோகஸ்தர்களையும் இம்மாதம் 29-ம்திகதிமாலை நூலகத்திலிருந்து சந்தை வரை ஊர்வலமாக அழைத்துச் சென்று நவீன சந்தைக்கான அத்திபாரக்கல்லை நாட்டவும், நூலகத்தை அமைச்சர்பார்வையிடவும், தேநீர் விருந்தளிக்கவும், பொதுக்கூட்டம் நடத்தவும் ஒழுங்குகள மேற்கொள்ளப்படுகின்றன. இவற்றுக்கான செலவுகளுக்கெனப்பட்டின சபை 1500 ரூபாவை ஒதுக்கியுள்ளது.

## 40 பேருக்கு 7 தட்டச்சு இயந்திரம்

பருத்தித்துறை, வெள்ளி

பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் 40 பேருக்கு மேற்பட்ட வர்த்தக மாணவர்கள் இருந்த போதிலும் 7 தமிழ்த் தட்டச்சுக[illegible]த்

## இசைவட்டத்தின் வருடாந்த பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், சனி

இம்மாதம் 24ம் திகதி யாழ் இசைவட்டத்தின் முதலாவது வருடாந்த பொதுக் கூட்டம் யாழ்ப்பாணம் இல-59 பாய்ஷால் வீதியிலுள்ள 'கலைமன்றம்' வளவுக்குள் நடைபெற விருக்கிறது.

இக் கூட்டத்தில் நடப்பு வருட உத்தியோகத்தர்களும் தெரிவு செய்யப்படவுள்ளார்கள் கூட்ட முடிவில் இராமநாதன் இசைக்கல்லூரி அதிபர் சங்கீதகலாநிதி சித்தூர் சுப்பிரமணியம் பிள்ளையின் இன்னிசைக்கச்சேரியும் நடைபெறும்.

சுருவில்

## தீண்டாமை ஒழிப்பு மாதம்

மாவிட்டபுரம், வெள்ளி

அகில இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் தீண்டாமை ஒழிப்பு மாதம் உரும்பிராயில் ஆரம்பமானது.

கோப்பாய்த் தொகுதியிலுள்ள உரும்பிராய்கிராமத்தில் ஆரம்பிக்கப்பட்ட இத் தீண்டாமை ஒழிப்பு மாதம் ஒரு மாதத்துக்குள் மற்றும் கிராமங்களுக்கு விஸ்தரித்து சாத்வீக முறையில் சிறுபான்மையோர் பிரச்னைக்கு தீர்வு காண்பதென மேற்படி சபைத் தலைவர் திரு எம்- சி. சுப்பிரமணியம் தெரிவித்தார்.

இம் மாதத்தில் பாடசாலைகளிலும் கிராமங்களிலும் தீண்டாமை ஒழிப்புகொடி விற்பனை செய்யவும் பிரசாரம் சொற்பொழிவு ஆகியன நிகழ்த்துவதற்கும் கல்வி அதிபரை சந்தித்து நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இத்துடன் ஒலிபரப்புக் கூட்டுஸ்தாபனம்மூலம் நாடு முழுவதும் இது விடயமாகப் பிரச்சாரம் செய்வ

# செய்திச் சுருக்கம்

## தட்டுப்பாடு

மன்னர் மாவட்டத்திலுள்ள பல பாடசாலைகளின் மாணவர்கள் தங்களுக்குத் தேவையான உபகரணங்களைப் பெற இயலாமல் கஷ்டப் படுகிறார்கள்.

கொப்பி, சிலேட் போன்ற அத்தியாவசியப் பொருட்களும் உயர் வகுப்புகளுக்குத் தேவையான புத்தகங்களும் கடைகளில்கிடைக்காததால் இங்குள்ள மாணவர்களின் கல்வி பாதிக்கப்படுகிறது எனப் பெற்றோர்கள் பெரிதும் கவலைப் படுகிறார்கள்.

0 0 0

## ஒத்திவைப்பு

இலங்கை உயர் தொழில் நுட்பக்கல்லூரி கட்டுப்பெத்தை தொழில் நுட்பக் கல்லூரி ஆகியவற்றின் தமிழ் மன்றத்தினது கலை விழா இம்மாதம் 30-ம்திகதி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறவிருந்தது. இக் கலைவிழாவை மேற்படி மன்றத்தினர் அடுத்தமாதம்21ம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளனர்.

0 0 0

வெள்ள நிவாரணத்துக்கு

## மூன்றேகால் லட்சம் ரூபா

இதுவரை சமூகசேவை அமைச்சின் வெள்ள நிவாரண நிதிக்கு ரூபா 320,844 கிடைத்துள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

0 0 0

## பொது விடுமுறை தினம்

ஏப்பிரல் 15ம் திகதி பொது விடுமுறை தினமாகப் பிரகடனம் செய்யப்படவிருக்கிறது. உள்நாட்டமைச்சர் டாக்டர் தகநாயக்காவின் வேண்டுகோளுக்கிணங்கியே மேற்படி தினத்தை பொது விடுமுறையாக்கப் பிரதமர் உடன்பட்டுள்ளார் ஏப்பிரல் 13ம் திகதியும் 14ம் திகதியும். முன்னரே பொது விடுமுறை தினங்களாகப் பிரகடனம் செய்யப் பட்டுள்ளன.

## தொழில் புரிபவர் தொகை

நாட்டிலுள்ள தொழில் புரியக்கூடிய 68 இலட்சம் பேரில் 37 லட்சம் மக்களே வேலை வாய்ப்புடையவர்களாக விருக்கின்றனர். மத்திய வங்கியின் திட்ட அலுவலகம் சமீபத்தில் தயாரித்துள்ள புள்ளிவிபரங்களில் இருந்து இது தெரிய வந்திருக்கிறது. வேலையற்றோரின் தொகை சடந்த ஆண்டில் 10 லட்சத்துக்கும் 5 லட்சத்துக்கும் இடைப்பட்டது எனக் கணிக்கப்பட்டது.

0 0 0

## பிரிட்டிஷ் உதவி

'பெகாஸஸ்ரீவ்' என்ற பெயரேடு புதிய ஹோட்டலொன்றுதெஹியோவத்தையில் நிறுவப்படுகிறது. இப் புதிய ஹோட்டலுக்குகுத் தேவையான கரண்டி கத்தி முதலிய உபகரணங்களை பிரிட்டன் கொடுத்துதவவிருக்கிறது. நவீன மோஸ்தரில் வெள்ளி உபகரணங்களைச் செய்யும் 'வின்னஸ் லிமிட்டெட்' என்ற பிரிட்டிஷ் கம்பனியே மேற்படி கரண்டி கத்தி முதலியவற்றை இலங்கைக்கு உதவவிருக்கிறது. விரைவில் இப் பொருட்கள் இங்கு வந்து சேருமெனத் தெரிகிறது.

0 0 0

## தாய்லாந்து பயணமானுர்

சவுதி அரேபியாசெல்லும் ஹஜ்யாத்ரீகர்களுக்கு விஸா வழங்குவதற்காக இலங்கை வந்திருந்த ஜனப் முகமது அப்துல்லா அல் ஹம்தான் நேற்று முன்தினம் தாய்லாந்து பயணமானுர்.

ஜனப் முகமது அப்துல்லா அல்ஹம்தான் சவுதி அரேபியாவின் உதவித் தூதராவர். இவர் இங்கு தங்கியிருந்த காலத்தில் 500 க்கு மேற்பட்ட ஹஜ்யாத்திரீகர்களுக்கு விஸாவழங்கினுர்.

## தீவுப்பகுதி ச. ச. நிலையங்களின் விழாப் போட்டி முடிவுகள்

வேலணை, வெள்ளி

உள்ளூராட்சி வாரத்தை யொட்டி தீவுப்பகுதிசனசமூக நிலையங்களின் விழா வேலணை மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. ப பரஞ்சோதி தலைமையில் நடை...

பருத்திய டைப்பு' எம் ஜெயசூரியா, குமரன் ச ச நிலையம், பருத்தியடைப்பு

கீழ்ப்பிரிவு நீளம்பாய்தல்: என் மகேஸ்வரன், குமரன் ச ச நிலையம் எம் ஜெயசூரியாகுமரன் ச ச நிலையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகல் 12-00, 12-45, 1-30.
மாலை 4-25, 5-00, 6-00.
இரவு 7-00, 8-00, 9-00, 10-30.
திரைகானம்: காலை 7-30. பகல் 12-03, 1-00.
இரவு 10-00.
மாலை 6-15 பாமாலை.
இரவு 7-15 வீணை, 8-03 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 கலைக்கோலம்.

யர் எம் செல்லையா, மகாலிங்கம், தவவிநாயகம் (கி. ச. தலைவர், அல்லைப்பிட்டி) எம் விஜயரெட்ணம், அம்பலம் (கி ச தலைவர், நெடுந்தீவு), திருமதி பரஞ்சோதி, திருமதி பாலசுப்பிரமணியம் ஆகியோர் கடமையாற்றினர் ஊர்காவற்றுறை பொலிஸ்நிலைய அதிபர் திரு. இராஜையா விசேஷமாகக்கலந்துகொண்டார்.


ராணி (யாழ்ப்பாணம்) [தினசரி 3 காட்சிகள்]
எம். ஜி. ஆர். - ஜெயலலிதா
அசோகன் - சோ - சந்திரபாபு
நடித்த
# அடிமைப் பெண்

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி கணேசன் நாகேஷ்; சரோஜாதேவி
மற்றும்பலர் நடித்த
# அஞ்சல் பெட்டி 520

7வது வெற்றி வாரம்
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி பி ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி.
பிரிபோயா, போயா 4 காட்சிகள்
★ சிவாஜி ★ பத்மினி
★ ஜெமினி ★ சாவித்திரி
★ முத்துராமன் ★ கே ஆர். விஜயா
★ நாகேஷ் ★ மனோரமா
நடித்த
# திருவருட் செல்வர்
[ஈஸ்ட்மென் கலர்]

கெப்பிட்டல் (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) வெம்பிளி (கண்டி)
நடிகர் திலகம்
★ சிவாஜிகணேசன்
நாட்டியப்பேரொளி
★ பத்மினி
மற்றும் பலர் நடித்து
ஏ. பி. நாகராஜனின் தயாரிப்பில் உருவான
மற்றுமோர் வெற்றிச்சித்திரம்
# தில்லானா மோகனம்பாள்


தவிர்த்து காரியத்தில் கண்வைக்கவும்.

கும்பம்- களஸ்திர வழியால் மகிழ்ச்சிக்கு இடம் உண்டு. பிரிந்தவர்கள் மீண்டும் வாழ்க்கையில் இணைவர். காதலர்கள் வாழ்வில் தித்திப்பான சம்பவங்கள் நடைபெறும். புசிதிரவழியாலும் மகிழ்ச்சி உண்டு

**மீனம்-** விஷப் பரீட்சையின் மூலம் விபரீதங்கள் விளையும். மயக்கும் மொழிகளால் பணத்தை இழக்க நேரிடலாம். இன்று சும்மா இருப்பதே சுகம்.

## அண்ணா சிரார்த்த தினம்

யாழ்ப்பாணம், சனி

பாஷையூர் புனித அந்தோனியார் சமூக சேவாசங்கத்தினர் அடுத்த மாதம் 3-ம்திகதி அண்ணா சிரார்த்த தினத்தைக் கொண்டாடவிருக்கின்றனர். (கா. நி


ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி 630 930
பிரிப்போயா, போயா 2-30 மணி
சிவாஜி-பத்மினி-என் எஸ். கே
நடித்த
பணம்

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
எம். ஜி. ஆர். - ஜெயலலிதா
சோ
நடித்த
ஒளிவிளக்கு

வெஸ்லிசினிமா
மானிப்பாய்
தினசரி: 6-30, 9-30
பிரிபோயா, போயா 2-30மணி
சிவாஜி — சாவித்திரி
நடித்த
காத்தவராயன்

வல்வெட்டித்துறை
ரஞ்சனா தியேட்டர்
தினசரி: 6-30, 9-30
சிவாஜி- பத்மினி
நடித்த
தெய்வப்பிறவி
4-30க்கு மட்டும்
NAKED WORLD
(adults)

மனோகரா
யாழ்ப்பாணம்
தினசரி 6-30, 10-00
பாலாஜி - E V சரோஜா
நடித்த
சுமங்கலி

REGAL JAFFNA
Daily 4-45, 7 & 9-45, p.m
Lee Marvin
Vera Miles
in
SERGEANT RYKER
(Color)


## சுதந்திரதினம் கொண்டாட ஏற்பாடு

முசலி, வெள்ளி

அடுத்தமாதம் 4-ம் திகதி மன்னார்மாவட்டத்தில் சுதந்திர தின விழாவை விமரிசையாகக் கொண்டாடுவதற்கு ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. இதனையொட்டி நடைபெறவுள்ள விளையாட்டுப் போட்டிகளுக்கான ஏற்பாடுகளை மன்னார் மாவட்ட உதவிபொலிஸ் அதிபர் திரு. எம்- பி- எல்- பெரேரா கவனித்து வருகிறார். பல்வேறு விளையாட்டுகளும் இடம்பெறும் இப்போட்டிகள் புனிதசவேரியர் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

முசலிக் காரியாதிகாரி பிரிவில் சுதந்திர தினத்தைக் கொண்டாடுவதுபற்றி மன்னார் கச்சேரி தலைமைப்பீடக் காரியாதிகாரிதிரு. கே. மாணிக்கவாசகர் தலைமையில்கூடி ஆராயப்பட்டது. பிரிவுக் காரியாதிகாரி மற்றும் விளையாட்டுத்துறை உத்தியோகத்தர் எம். சீவரத்தினம் உட்பட பலர் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

## வேலணையில்

சுதந்திர தினத்தைக் கொண்டாடும் பொருட்டு விளையாட்டுக்கழகங்களிடமிருந்து ஊர்காவற்றுறைக் காரியாதிகாரியினால் இம்மாதம் 28-ந்திகதிவரை விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. சுதந்திர தினத்தின் போது புங்குடுதீவிலிருந்து ஊர்காவற்றுறைத்துறைவரை சைக்கிளோட்டப்போட்டியும் மற்றும் நீச்சல்போட்டி, மரதன் ஓட்டப்போட்டி முதலியனவும் நடைபெற்றபின் மாலை வேலணை மத்தியமகாவித்தியாலயத்தில் கயிறு இழுத்தல் விநோதஉடைப்போட்டி சதம்ப நிகழ்ச்சிகள் நடைபெறவிருக்கின்றன. விளையாட்டுப் போதனாசிரியர் திரு. பி. பொன்னுச்சாமி இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளார்.


வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க


பருத்தித்துறை, வெள்ளி

பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் 40 பேருக்கு மேற்பட்ட வர்த்தக மாணவர்கள் இருந்த போதிலும் 7 தமிழ்த் தட்டச்சுகள் மாத்திரமே உள்ளனவாம். இதனால் குறிப்பிட்ட மாணவ ஆசிரியர்கள் பலத்த சிரமம் அடைகிறார்கள்.

இதுபற்றி உடனடி கவனமெடுத்து குறைந்தது 20 தமிழ் 'றெமிங்டன்' தட்டச்சுகளாவது அனுப்பிவைக்க வேண்டுமென உபசபாநயகர் திரு. சிவசிதம்பரம் கல்வி அமைச்சரிடம் கேட்டுக்கொண்டிடுள்ளார்.

## இடமாற்றங்கள்

பருத்தித்துறை, வெள்ளி

வடமராட்சி காரியாதிகாரி கந்தோர் பிரதம லிகிதர் திரு. என். எஸ். உலகநாதபிள்ளை, கண்டி சௌக்கிய சேவை அத்தியட்சகர் காரியாலயத்திற்கும் திரு. வி. நடராசா அவருடைய இடத்திற்கும். அதே காரியாலயத்தைச் சேர்ந்த திரு. வி. பொன்னுத்துரை கொழும்பு தொழிற் கந்தோருக்கும், திரு. என். நாகலிங்கம் பருத்தித்துறை காரியாலயத்திலிருந்து அநுராதபுரத்திற்கும், மகாவல்ல காரியாதிகாரி கந்தோரைச் சேர்ந்த திரு. கே. டி. பாலகிருஷ்ணன், பருத்தித்துறைக்கும் வடமராட்சிக் காரியாதிகாரி கந்தோரைச் சேர்ந்த திரு. கே. பஞ்சரத்தினம் செங்கலடிக்கும், திருகோணமலையிலிருந்து திரு. கே. கந்தசாமி பருத்தித்துறைக்கும் இடமாற்றம் பெற்றுள்ளனர்.

## 'கஷ்டத்தை உடன் நீக்குக'

யாழ்ப்பாணம், சனி

கடந்த நவம்பர் மாதம் நடைபெற்ற மன்னார் மாவட்ட இணைப்புக்குழுக் கூட்டத்தில், பாண்டியன் குளத்தில் உப-தபால் நிலையமொன்று திறக்கப்படவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்ட போதிலும் இவ்வாண்டு இதற்கான பணம் ஒதுக்கப்படவில்லையென அறிவிக்கப்பட்டுள்ளதாம்.

'350 க்குமதிகமான ஏழை மக்களின் கஷ்டத்தை உணர்ந்து 64-ம் ஆண்டு தபால் நிலையக்கட்டிடத்தை அரசாங்கம் அமைத்தும் இதுவரை அது திறபடாதிருப்பது தேசிய அரசாங்கத்திற்கு இழுக்காகும். இதை உணர்ந்து இக்கட்டத்தை அரசாங்கம் உடன் நீக்க வேண்டும்' என பனங்காமம் கிராமசபை தீர்மானம் நிறைவேற்றியுள்ளது

நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இத்துடன் ஒலிபரப்புக் கூட்டுஸ்தாபனம்மூலம் நாடு முழுவதும் இது விடயமாகப் பிரச்சாரம் செய்வதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## இலவச பாடநூல் கி. ச. வழங்கும்

யாழ்ப்பாணம், சனி

'பனங்காமம் கிராமசபை, பனங்காமம் பகுதியிலுள்ள பாடசாலைகளில் கல்வி கற்கும் ஏழைப்பிள்ளைகளுக்கு இலவசமாகப் புத்தகங்கள் விநியோகிப்பதற்கு ரூபா 1000 வழங்கியுள்ளது. இம்மாத முடிவுக்குள் புத்தகங்கள் விநியோகிப்பதற்கு நடிவடிக்கை எடுக்கப்பட்டுவருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## புதிய ஆயர்

பண்டத்தரிப்பு, வெள்ளி

இலங்கையின் அப்போஸ்தலிக்க ஸ்தனாதிபதியாக நியமனம்பெற்ற வந். லூசியானோ ஸ்ரெரோ இம்மாதக் கடைசிப் பகுதியில் ரோமில் ஆயராக அபிஷேகம் பெறுவார்.

## உடுப்பிட்டியில்

உடுப்பிட்டி, வெளளி

உடுப்பிட்டிக் கிராமசபை உள்ளூராட்சி வாரத்தை சிறப்பானமுறையில் கொண்டாடுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகிறது. உடுப்பிட்டிக்கிராமசபைத் தலைவர் திரு. ஆர். ஆர். தர்மரத்தினம் தலைமையில் நடைபெற்ற கிராமசபையின் மாதாந்தக் கூட்டத்தில் உள்ளூராட்சி வாரவிழாவைக் கவனிப்பதற்கென ஒரு குழு தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

## அபிஷேகம் பெற்றனர்

பண்டத்தரிப்பு. வெள்ளி

இலங்கையில் ஐந்து கத்தோலிக்க குருமார் அபிஷேகம் பெற்றுள்ளனர். சகோதரர்கள், வண. கிறிஸ்ரோபர் பெர்னாண்டோ, வண. வின்ஸ்ரன் பிளாசிடுஸ், வண. றெயிட் செல்ரன், வண. அன்ரனி வால்டர் வண. ஹென்றி, ஜோசப் சில்வா ஆகியவர்களே அபிஷேகம் பெற்றவர்களாவர்.

உள்ளூராட்சி வாரத்தையொட்டி தீவுப்பகுதிசனசமூக நிலையங்களின் விழா வேலணை மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. ப பரஞ்சோதி தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் இடம்பெற்ற பல்வேறு போட்டிகளிலும் வெற்றியீட்டியவர்கள் விபரம் வருமாறு-

கரபந்தாட்டப்போட்டி: கரம்பன் ஆனந்தாச சநிலையம், புளியங்கூடல் மகாமாரி ச ச நிலையம், இரு தினங்கள் நடைபெற்ற இப்போட்டிக்கு விளையாட்டுப் போதனாசிரியர் திரு பி பொன்னுச்சாமி மத்தியஸ்தம் வகித்தார்.

மேற்பிரிவு (சீனியர்) 100 யார் ஓட்டப்போட்டி: எம் சூசைபாலன். சென் ஜேம்ஸ் ச ச நிலையம், ஊர்காவற்றுறை. எம் சத்தியானந்தன் சிவலைப்பிட்டி, ச ச நி புங்குடு, தீவு பி சண்முகரத்தினம். மகாமாரி, ச ச நி புளியங்கூடல்.

மேற்பிரிவு 880 யார்- எஸ். பிரான்சிஸ், சென்ஜேம்ஸ் ச. ச. நிலையம், ஊர்காவற்றுறை எல் ஆசிர்வாதம், சென் ஜேம்ஸ் ச ச நிலையம், ஊர்காவற்றுறை. கே முத்துக்குமாரு, சிவலைப்பிட்டி ச ச நிலையம், புங்குடுதீவு.

நீளம் பாய்தல் (மேற்பிரிவு) எஸ். பிரான்சிஸ், சென் ஜேம்ஸ் ச ச நிலையம், ஊர்காவற்றுறை. எம் சூசைப்பிள்ளை, சென் ஜேம்ஸ் ச ச நிலையம், ஊர்காவற்று றை. ஏ செல்வநாதன், மதியொளி ச ச நிலையம், மண்டைதீவு

கீழ்ப்பிரிவு: 100 யார் ஓட்டம் எல் அமலதாஸ், மகாமாரி ச ச நிலையம், புளியங்கூடல்- என் மகேஸ்வரன், குமரன் ச ச நிலையம் எம் ஜெயசூரியா, குமரன் ச ச நிலையம், பருத்தியடைப்பு

கீழ்ப்பிரிவு நீளம்பாய்தல். என் மகேஸ்வரன், குமரன் ச ச நிலையம் எம் ஜெயசூரியாகுமரன் ச ச நிலையம் பி ஆனந்தராஜ், செட்டிபுலம், ச ச நிலையம், வேலணை

கீழ்ப்பிரிவு 220 யார் ஓட்டம் மகேஸ்வரன். குமரன் ச ச நிலையம் எல். அமலநாதன், மகாமாரி ச ச நிலையம் ஏ பரமலிங்கம், சிவலைப்பிட்டி ச ச நிலையம்

ஒருமைல் ஓட்டம்: பிரான்சிஸ் சென் ஜேம்ஸ் ச ச நிலையம் தேவராஜா, மதியொளி ச ச நிலையம், சிவலிங்கம், சிவலைப்புட்டி ச ச நிலையம்

மெதுவான சைக்கிளோட்டப் போட்டி: எஸ் சிற்றம்பலம், மகாமாரி ச ச நிலையம், ரீ தங்கராஜ், குமரன் ச ச நிலையம்,

வில்லுப்பாட்டுப்போட்டி: மகாமாரி ச ச நிலையம்

பாட்டுப்போட்டி: நா அன்னராசா, குமரன் ச ச நிலையம், சு சிவபாலன், சிவலைப்பிட்டி ச ச நிலையம், சந்திரன், ஐயனார் ச ச நிலையம், வேலணை

பேச்சுப்போட்டி: ம ஜெயராம ஐயர், அறிவகம் ச ச நிலையம், அல்லைப்பிட்டி, பொ மாணிக்கவாசகர், மகாமணி ச ச நிலையம் கு கிருபாஷினி, அறிவகம் ச ச நிலையம்.

வாத்திய இசைப்போட்டி- மகாமாரி ச ச நிலையம், புளியங்கூடல்-

கிராமிய நடனப்போட்டி: மகாமாரி ச ச நிலையம்

யோகாசனப்போட்டி: எம்

(2-ம் கலம் பார்க்க)


"ராதா"
# சக்தி பூஜா அகர் பத்தி
★ ஆலயங்கள்
★ திருமண வைபவங்கள்
★ இன்ப நிகழ்ச்சிகளிலும்
உங்கள் இல்லங்களை வாசனையால் பரிமளிக்கச் செய்வது
ராதா சக்தி பூஜா
அகர் பத்திகளே!
ஏக விநியோகஸ்தர்கள்:
எஸ் சுப்பிரமணியம் அன் கொம்பனி
53, கே. கே. எஸ். றேட், யாழ்ப்பாணம்.
160, செட்டியார் தெரு, கொழும்பு-11.
போன்: 541 Residence: 7068


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூயஸ்வளை குடா தீவொன்றை இஸ்ரேலியர் கைப்பற்றினர்

## 19 எகிப்தியர் கொல்லப்பட்டனர் 40 பேர் கடத்தப்பட்டனர்

டெல் அவிவ், ஜனவரி 23

சூயஸ் வளை குடாவிலுள்ள ஷாட்வான் என்ற தீவில் இஸ்ரேலியர் இறங்கி அதனைக் கைப்பற்றியுள்ளதாக அறிவித்துள்ளனர்.

இத்தீவிலுள்ள எகிப்தியரின் ரடார் நிலையமும் இஸ்ரேலியரின் கைவசமிருக்கின்றதாம். ஹெலிகாப்டர் விமானங்களில் இஸ்ரேலியர் இத்தீவில் இறங்கினர்களாம்.

'சூயஸ் வளைகுடாவில் உள்ள ஐக்கிய அரபுக்குடியரசின் தீவொன்றில் ஹெலிகாப்டர்களில் இஸ்ரேலியப் படைகள் இறங்கி அத்தீவையும் அத்தீவிலுள்ள ராடார் நிலையத்தையும் கைப்பற்றியதாக இஸ்ரேலியர் அறிவித்தனர். எகிப்தியரின் இரண்டு ரோப்பிடோ படகுகளையும் அதிலிருந்த கடற்படையினரையும் இஸ்ரேலியர் கைப்பற்றியுள்ளனர்.

இஸ்ரேலியர் இத்தீவைக் கைப்பற்ற முன் கடுமையான சண்டை நடைபெற்றதாகவும் நேற்று மாலைவரை சண்டை தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருந்ததாகவும் அறிவித்தனர்.

இச்சண்டையில் 19 அரபுக் குடியரசுப்படை வீரர்களைக் கொன்றதாகவும் 40பேர்வரை சிறைபிடிக்கப்பட்டிருப்பதாகவும் அவர்கள் அறிவித்துள்ளனர் இத்தீவைத்தாமே வைத்துக் கொள்வது தமது நோக்கமல்லவென்றும் இஸ்ரேலியர் கூறியிருக்கின்றனர். இச்சண்டையில் தங்கள் தரப்பில் மூவர் மட்டுமே பலியானதாக இஸ்ரேலியர் கூறினர்.

### எகிப்தியர் அறிக்கை

சூயஸ் வளைகுடாவில் ஐக்கிய அரபுக்குடியரசுத் தீவு ஒன்றின் மீது இஸ்ரேலிய விமானப்படைகள் மேற்கொண்ட தாக்குதல் ஒன்றை எகிப்திய விமானப்படையினர் முறியடித்துள்ளதாக அறிவித்துள்ளனர். இஸ்ரேலியரின் மூன்று விமானங்களைச் சுட்டுவீழ்த்தியதாகவும் முப்பதுபேரைக் கொன்று அல்லது காயப்படுத்தியிருப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனா

ஆனல் இஸ்ரேலியர் இதனை மறுத்திருப்பதோடு தம்தரப்பில் விமானம் எதுவும் சேதமடையவில்லை என்றும் அறிவித்துள்ளனர்.


### ஜோர்டானியர் துரத்தியடித்தனர்

ஜோர்டான் ஆற்றைக் கடந்து வந்து தாக்குதலில் ஈடுபட்ட இஸ்ரேலிய அணியொன்றை மேற்கு திசை நோக்கித் துரத்தியடித்து விட்டதாக ஜோர்டான் அறிவித்துள்ளது. தெற்கு ஜோர்டான் பகுதியில் கோர் அல்-சாபி என்ற இடத்தில் நடைபெற்ற இச்சண்டையில் ஒரு ஜோர்டானியர் கொல்லப்பட்டதாகவும் 9 பேர் காயமடைந்ததாகவும் அதிகாரி ஒருவர் கூறினர்.

இதற்கிடையில் கொரில்லாப் படைகளின் இணைப்பு இயக்கமான பாலஸ்தீன கொமாண்டோ அணியின் அதிகாரி ஒருவர் இது பற்றி கூறுகையில் ஆறு கொமாண்டோக்கள் கொல்லப்பட்டதாகவும்நான்கு பேர் காயமடைந்ததாகவும் தெரிவித்தார். கொரில்லா நிலைகளின் மீது விமானப்படை உதவியுடன் இஸ்ரேலியர் மேற்கொண்ட தாக்குதலை அல்பட்டா படைகளும், சவூதி அரேபியா படைகளும் முறியடித்ததாக அறிவித்துள்ளனர்.

காயமடைந்தவர்களையும் சேதமுற்ற வாகனங்களையும் இஸ்ரேலியர் அப்புறப்படுத்திக்கொண்டிருப்பதைக்கண்டதாக ஜோர்டான் அதிகாரிகள் கூறினர்

சாபி பிரதேசத்திற்கு மன்னர் ஹுசெயின் விஜயம் மேற்கொண்டு படைத்தளபதிகளைச் சந்தித்துவிட்டு அம்மனுக்குத் திரும்பினர்




# ஈராக்கில் இருதினங்களில் 41 பேருக்கு தூக்குத்தண்டனை

## ஆறு விமானங்களை அமெரிக்கா அனுப்புகிறது

வேகோஸ், ஜன 23

நை[illegible]யாவில் நிவாரண பொரு[illegible]களை எடுத்துச் சென்று விநியோகிப்பதற்கென அமெரிக்கா ஆறு விமான[illegible] [illegible]க்கு அ[illegible]

பிய[illegible]ப்ரா கஷ்ட நிவாரணத்[illegible]கென அமெரிக்கா

பவுண்களை ஒதுக்கியிருக்கின்றது. பியாப்ரா நிலைமை குறித்து வெளிநாடுக[illegible] சிலபத்திரிகைகளில் வெளிவந்த செய்திகளை ஜெனரல் கோவான் கண்டனம் தெரிவித்திருக்கின்றது.

பியாப்ராவுக்கு விஜ[illegible] செய்து விட்டுத் திரும்[illegible]

## இரண்டையும் எதிர்ப்பர்

புதுடில்லி, ஜன. 23

மார்க்ஸீஸ கம்யூனிஸ்ட் கட்சியினர் இரண்டு காங்கிரஸ் கட்சிகளையுமே எதிர்ப்பர் என்று முன்னள் கேரளா முதல்வர் நம்பூதிரிபாட் கூறியிருக்கிருர்.

காங்கிரஸ் இரண்டாக உடைந்த பிறகும் புதிய முற்போக்கு சக்தி உருவாகவில்லை. இரண்டு காங்கிரஸ் கட்சிகளையும் நாங்கள் எதிர்ப்போம். முற்போக்குத் திட்டங்களை முழு அளவில் தீவிரமாக அமுல்படுத்தும் புதிய சக்தி ஒன்று உருவாகவேண்டும். அதற்கு மற்றக் கட்சிகளில் உள்ள முற்போக்காளர்கள் ஒத்துழைக்கவேண்டும் என்கிருர் திரு. நம்பூதிரிபாட்.

## ஜெகஜீவன்ராம் தமிழ்நாடு வருவார்

புதுடில்லி, ஜன. 23

இந்திரா ஆதரவு காங்கிரஸ் தலைவர் திரு. ஜெகஜீவன்ராம் தமிழ்நாடு உட்பட இந்தியா முழுவதும் சுற்றுப்பிரயாணம் மேற்கொண்டு கட்சிக்கு ஆதரவு தேட உத்தேசித்திருக்கிருர்.

## சுப்பிரமணியம் இடம்பெற்ருர்

புதுடில்லி, ஜன. 23

அகிலஇந்திய காங்கிரஸ் (இந்திரா ஆதரவு) கட்சியில் ஆட்சிமன்றக் குழுவில் தமிழ்நாடு முன்னள் காங்கிரஸ் தலைவர் திரு. சுப்பிரமணியமும் இடம்பெற்றிருக்கிருர்.

## இராச வீதி பஸ் சேவை

புத்தூர், வெள்ளி

இன்னும் மூன்று மாதங்களுக்குள் இராச வீதியில் பஸ்சேவை நடக்கவிருக்கிறது.

இத்தகவலைகோப்பாய் எம். பி. திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளை அச்சுவேலி தோப்பு கிராம முன்னேற்றச் சங்கத் தலைவர் எஸ். வி, வேலுப்பிள்ளைக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்திருக்கிருர்.

இந்த வீதியால் பஸ் சேவை நடத்த வேண்டுமென்று கோரி கிராமச் சங்கத் தலைவர் எழுதிய கடிதத்திற்கு மேற்கண்டவாறு பதிலளித்த திரு. கதிரவேலுப்பிள்ளை இராச வீதியில் பஸ்சேவை நடத்துவதற்கு இ. போ. சபை சகல வித

## "உலக அரங்கில் தமிழர் கலைக்கு தனிமதிப்பு'

### கலையரசு பெருமிதம்

மட்டுவில், வெள்ளி

"இற்றைக்கு ஆருயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே எனது பாஷை, எனது சங்கீதம், நடனம், நாடகமாகிய கலைத் துறைகள், முன்னேறிய முழுமைபெற்றதாக விளங்கி, இன்று அது உன்னத நிலைக்கு வந்து, உலக அரங்கிலேயே முன்னணியில் திகழ்கின்றது என்ருல், எமது கலைத் துறையின் உயர்வைப்பற்றிக் கூறவும் வேண்டுமா?''.

இவ்வாறு சாவகச்சேரியில் நடைபெற்ற அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் மகாநாட்டில் முதலாம் நாள் மாலை நிகழ்ச்சியில் நடைபெற்ற கலையரங்கிற்குத் தலைமைதாங்கிய, கலையரசு திரு. சொர்ணலிங்கம், தனது தலைமை உரையின் போது கூறினர்.

அவர் தொடர்ந்து கூறியதாவது:

''இன்று எமது கர்நாடகக் கலையின் உயர்வு ஆருயிரம், ஏழாயிரம் மைல்களுக்கப்பால் உள்ள, அமெரிக்கா போன்ற தேசங்களிலும் பரவியுள்ளது. ஆனல், அன்று எனது மத்தியிலே இருந்த ஆங்கில மோகம் காரணமாக, எமது கர்நாடக சங்கீதத்தின் புகழ் மங்கியேஇருந்தது.

இன்று இந்தியாவிலே, நடனக் கலையைக்கற்று, அதைத் தொழிலாகக் கொண்ட கலைஞர்களை விட, எமது நாட்டிலே பிள்ளைகள் நடனக் கலையில் சிறப்புடன் விளங்கிருர்கள் என்ருல் அது மிகையாகாது.

இன்று எனது வாழ்விலே நாடகக்கலை ஒரு முக்கிய அம்சமாக விளங்கிக் கொண்டிருக்கிறது. இந்த நாடகக் கலை மூலம் தான் எந்த ஒரு பிறநாட்டுக் கலைஞர்களின் மொழியை அறியாதபோதிலும், அவர்களுடைய கருத்துக்களை மக்கள் புரியக்[illegible] வாய்ப்பு இருக்கிறது.

எனவேதான் நாடகக் கலையை, மக்கள் சிறந்த ஒரு கலையாக கொண்டாடி வருகிருர்கள்''.

அடுத்து நாதஸ்வர இசையுடன் கலையரங்கு ஆரம்பமானது.

## 'வேலையில்லா பிரச்னை பயங்கரமான தொற்றுவியாதி"

மாவிட்டபுரம், வெள்ளி

'எமது ஜீவாதாரமான இந்தப் பிரச்னைக்கு அரசும், அரசியல்வாதிகளும் தகுந்த பதில்தந்துதான் தீரவேண்டும். இல்லையேல் சூழ்நிலைக்கேற்ப போராட்ட வடிவங்கள் மாறும். அவர்கள் மௌனம் சாதிப்பதையும் போலி வாக்குறுதிகள் தருவதையும், நடைமுறையில் செயல்படுத்தாது திட்டங்களைப் போடுவதையும் காட்டி நீண்ட நாளைக்கு எம்மை ஏமாற்றமுடியாது.'

இவ்வாறு யாழ் மாவட்ட வேலையற்ற சம்மேளனம் நடாத்தவிருக்கும் பிரமாண்டமான ஊர்வலம், கூட்டம் ஆகியவற்றுக்கு ஆதரவு திரட்டும்முகமாக மாணவர்கள், தொழிலாளர்கள், பொதுமக்கள், பட்டதாரிகள் ஆகியோருக்கு சம்மேளனம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இச்சம்மேளனத் தலைவர் திரு. க. சதானந்தன், செயலாளர் திரு. க. குணேந்திரதாசன் ஆகியோரால் வெளியிடப்பட்ட இவ்வறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது:

வேலையில்லாப் பிரச்னை அடிப்படையில் இது நாட்டின் சமூக பொருளாதார அமைப்புத் தோற்றுவித்துக் கொண்டிருக்கும் அபாயகரமான புற்றுநோய்களில் முக்கியமானது. இதனை இந்த நாட்டிலிருந்து அகற்றுவதற்கு வாலிபர்களின் ஐக்கிய முற்ற போராட்டம் ஒன்றே வழியாகும். இன்று வேலையற்ற வாலிபர்களினுல் ஏற்படும் வாழ்க்கைப்பழுவை உழைக்கின்ற தொழிலாளர்கள் சுமக்கவேண்டியுள்ளது'.

வேலையில்லாப்பிரச்னைஒரு ஒரு தேசிய பொருளாதாரப் பிரச்னையாகும். ஏனெனில் தென்னிலங்கையில் பல லட்சக் கணக்கான வேலையற்ற வாலிபர்கள் தங்களது பிரச்னையைத் தீர்ப்பதற்கு போராட்டப் பாதையில் அணிதிரண்டு விட்டனர். உதாரணமாக இந்த வாலிபர்கள் ரத்தினபுரியிலும் மாத்தறையிலும் இருந்து கால்நடையாக கொழும்பிற்கு வீரபவனிசெய்து தங்களது கோரிக்கையை வலியுறுத்தினர் ஆகவே நாமும் எமது போராட்டத்தை இனக்கட்சி பாகுபாடின்றி அவர்களது போராட்டங்களுடன் இணைத்து முன்னெடுத்துச் செல்வோம்',

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈராக்கில் இருதினங்களில்
# 41 பேருக்கு தூக்குத்தண்டனை

பாக்தாத், ஜன. 23

**ஈராக்கில் உளவு பார்த்த குற்றத்துக்காகவும் அரசைக் கவிழ்க்க முயற்சி எடுத்த குற்றத்துக்காகவும் கடந்த இரண்டு நாட்களில் 41 பேர்வரை மரணதண்டனைக் குட்படுத்தப்பட்டிருக்கிறார்கள்.**

இவர்கள் அனைவரும் சுடப்பட்டும், தூக்கிலிடப்பட்டும் மரணதண்டனை நிறைவேற்றப்பட்டார்கள்.

ஈராக்கில் ஆட்சிபுரியும் அரபு சோஷலிஸ பாத் கட்சிக்கு எதிராக சதிநடந்ததாகவும் அது உடனே நசுக்கப்பட்டு சதிகாரர்கள் சிறைபிடிக்கப்பட்டதாக பாக்தாத் ரேடியோ அறிவித்தது.

ஈரான் அரசு ஈராக் உள்விவகாரங்களில் தலையிடுவதாகக்குற்றஞ்சாட்டப்பட்டதைத் தொடர்ந்து பாக்தாத்திலுள்ள ஈரான் தூதர் திருப்பியழைக்கப்பட்டிருக்கிறார். சதிக்குற்றஞ்சாட்டை வைத்துக்கொண்டு அரசுக்கெதிரான எல்லாரையும் ஈராக் அதிகாரிகள் பழிவாங்கத் தொடங்கியிருப்பதாக அவதானிகள் சிலர் கருதுகிறார்கள்.

ஈராக் உள்விவகாரங்களில் ஈடுபட்டதாக ஈராக்கிலுள்ள ஈரானிய ராஜதந்திரிகள் அனைவரையும் திரும்பிப் போகும்படி உத்தரவிடப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது

ஈராக் அரசைக் கவிழ்ப்பதற்கு நடந்ததாகக் கூறப்படும் சதியில் ஈடுபட்டவர்கள் எங்ஙனம் கைதுசெய்யப்பட்டார்கள் என்பது பற்றி மேற்காஸிய நிருபர்கள் பின்வரும் தகவல்களைத் தெரிவிக்கிறார்கள்.

சதிகாரர்களுடன் சேர்ந்து கொள்வதாக சில ராணுவ அதிகாரிகள் பாசங்குசெய்து காட்டிக் கொடுத்திருப்பதாகக் கூறப்படுகின்றது. யுத்த டாங்கிகளைக் கொடுப்பதாக சதிகாரர்களை ராணுவ நிலையங்களுக்கு அழைத்துச் சென்று அங்கு அவர்களைக் கைதுசெய்ததாகக் கூறப்படுகின்றது.

இந்தச் சதியில் பிரதம பங்கு ஏற்ற நபர் ஜனதிபதியின் மாளிகைக்கு அழைத்துச்செல்லப்பட்டு அங்கு அவர் ஜனதிபதியாகப் பதவி ஏற்கப்போவது போன்றசூழ்நிலை உருவாக்கப்பட்டதாகவும் அங்கு அவர் தம்முடன் சேருவதாகப் பாசாங்குசெய்த அதிகாரிகளுக்கு ராணுவ பட்டங்களையும் காணிஉறுதிகளையும் வழங்கியதாகவும் கூறப்படுகின்றது.

---

## தமிழ்நாட்டில் மதுவிலக்கு கண்டிப்பாக அமுலாகும்

சென்னை, ஜன. 25

தமிழ்நாட்டில் மதுவிலக்கு கண்டிப்பாக அமுல்நடத்தப்படும் என்று தமிழ் நாடு முதலமைச்சர் திரு. மு. கருணநிதி அறிவித்திருப்பதாகத் தெரிகின்றது.

தி. மு. க. சட்டசபைக் கட்சிக் கூட்டம் கட்சி அலுவலகத்தில் தலைவர் மு. கருணநிதி தலைமையில் நடைபெற்றது. மாநில அரசின் மது விலக்குக் கொள்கை பற்றி கூட்டத்தில் விவாதிக்கப்பட்டதாகவும், அங்கத்தவர்கள்சாதகபாதகமான கருத்துக்களைத் தெரிவித்ததாகவும் கூறப்படுகிறது கருணநிதி பேசுகையில் மதுவிலக்குத் திட்டம் கண்டிப்பான முறையில் அமுலாக்கப்படும் என்றும், இதில் எந்தமாற்றமும் இல்லை என்றும் கூறியதாகத்தெரிகிறது. மதுவிலக்கினல் ஏற்படும் நஷ்டத்தை ஈடு செய்யும் வகையில் மத்திய அரசு மான்யம்வழங்கினல் உதவியாக இருக்கும் என்றும் அவர் கூறியதாகத் தெரிகிறது.

அரசாங்கம்உணவுக்கட்டுப்பாட்டை நீக்கியது சம்பந்தமாக கட்சியைக் கலந்து ஆலோசிக்க வில்லை என்று ஏ. வி. பி. ஆசைத் தம்பி அறிக்கை விட்டிருந்தது பற்றிக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டதாகத் தெரிகிறது. ஆசைத்தம்பி அறிக்கை விட்ட மறுநாளே தம்மைச் சந்தித்து உணவுக்கட்டுப்பாட்டை நீக்கியது வரவேற்கத்தக்கது என்று கூறியதாக முதல் மந்திரி தெரிவித்தார். இம்மாதிரி விஷயங்களில் இனி அவசரப்பட்டு அறிக்கை விடவேண்டாம் என்று கேட்டுக்கொண்டதாக தெரிகிறது. இதன்பேரில் ஆசைத்தம்பி மீது நடவடிக்கை எதுவும் எடுப்பதில்லை என்று முடிவு செய்யப்பட்டதாகத் தெரிகிறது.

கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் பொதுவாக, உணவு கட்டுப்பாட்டை அரசு ரத்துச்செய்ததை வரவேற்றதாகக்கூறப்படுகிறது. கவர்னர் உரை மீது சட்ட சபையில் நடைபெறும் விவாதத்தில் உறுப்பினர்கள் பங்கெடுத்துக் கொள்வது பற்றியும் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டதாகத் தெரிகிறது.

---

## பருத்தித்துறை நகர அபிவிருத்தி

உடுப்பிட்டி, வெள்ளி

பருத்தித்துறை நகர சபையின் புதிய நிர்வாகத்தினர் நகர அபிவிருத்தியில் தீவிர கவனம் செலுத்திவருகின்றனர். இதற்கு முன்னேடியாகக் கடந்த 19-திகதி பருத்தித்துறைச் சந்தையில் உள்ள பொதுக்கிணறு சிரமதானம் மூலம் சுத்தப்படுத்தப்பட்டுள்ளது.

இச்சிரமதானப் பணியில் ஈடுபட்டுவரும் சகல வட்டாரங்களையும் சேர்ந்தஇளைஞர்களும் புதிய நகரசபை உறுப்பினர்களும் பிரபல வர்த்தகர் திரு. மு. பொ. வீரபாகு தலைமையில் பருத்தித்துறை நகரில் உள்ள சகல வீதிகளிலும் குப்பை கூழங்களை அகற்றிச் சுத்தப்படுத்தியதுடன், கார் நிற்பாட்டும் இடத்தை அகற்றியதுடன் அவ்விடத்தை இ. போ. சவுக்குக் கொடுக்கவும் முன்வந்துள்ளனர்.

---

## மேற்குஜேர்மன் செல்கிறார்

புத்தூர், வெள்ளி

குடத்தனையைச் சேர்ந்த இளைப்பாறிய தலைமை ஆசிரியர் திரு. ஆ. வி. பொன்னுவினதும் நாகர்கோயில் அ. மி. பாடசாலை தலைமை ஆசிரியை திருமதி லில்லி பொன்னு என்பவரினதும் கனிஷ்ட புதல்வரான ஜே பி ஜெயசுந்தரம் அடுத்த மாதம் முற்பகுதியில் உபகாரச்சம்பளம் பெற்று 3 வருடபயிற்சி பெற மேற்கு ஜெர்மனி செல்கிறார். இவர் தற்பொழுது வாழைச்சேனை கடதாசி கூட்டுத்தாபனத்தில் பொறியியல் பகுதியில் கடமையாற்றுகிறார்.

இவர் ஹாட்லிக் கல்லூரி, அம்பாறை தொழில்நுட்பக் கல்லூரியின் பழையமாணவராவார்.

---

பொருட்களை எடுத்துச் சென்று விநியோகிப்பதற்கென அமெரிக்கா ஆறு விமானங்களை நைஜீரியாவுக்கு அனுப்பியுள்ளது.

பியாப்ரா கஷ்ட நிவாரணத்திற்கென அமெரிக்கா மேலும் 40 ஆயிரம் டன் உணவுப் பொருட்களை அனுப்புகின்றார்.

பியாப்ராவின் கஷ்ட நிவாரணங்களுக்கென நைஜீரிய அரசு மேலும் பல லட்சம் குறித்து வெளிநாடுகளில் சிலபத்திரிகைகளில் வெளிவந்த செய்திகளை ஜெனரல் கோவான் கண்டனம் தெரிவித்திருக்கின்றது.

பியாப்ராவுக்கு விஜயம் செய்து விட்டுத் திரும்பிய வெளிநாடுகளைச் சேர்ந்த சுமார் 80 பத்திரிகையாளர்கள் ஒரு ஹோட்டலில் தடுத்து வைக்கப்பட்டனர். பின்னர் இவர்கள் விடுவிக்கப்பட்டதாகத் தெரிகின்றது.

---

### தமிழ் நாடு கோயில்களில்

# தமிழில் கட்டாய அர்ச்சனை இருக்காது

சென்னை, ஜன. 23

தமிழ்நாட்டிலுள்ள காயில்களில் தமிழில் அர்ச்சனை நடத்தும்படி தமிழ்நாடு அரசு வற்புறுத்தல் செய்யாது. ஆனல் தமிழில் அர்ச்னை செய்வதற்கு விரும்பும் கோயில்களுக்கு வசதி செய்து கொடுக்கும் இத்தகவலை தமிழ்நாடு அறநிலைய அமைச்சர் திரு. கே. வி. சுப்பையா வெளியிட்டிருக்கிறார்.

அவர் திருச்சியில் இது பற்றி கூறியிருப்பதாவது:

பழனியில் உள்ள முருகன் கோவிலை மேலும் புதுப்பிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

ஏறத்தாழ 40 லட்சம் ரூபாய்செலவில், இதற்கான திட்டங்கள் வகுககப்படுகின்றன.

திருத்தணியில் உள்ள முருகன் கோவில் தேவஸ்தானம், புதிய கல்லூரிகட்ட 5 லட்ச ரூபாய் பணமும், கல்லூரிக்கான நிலமும் கொடுக்க முன்வந்துள்ளது. எனவே வருகிற கல்வி ஆண்டில் அங்கு ''அரசினர் கலைக் கல்லூரி அமைக்கப்படும்.

கோவில்களில் தமிழில் அர்ச்சனை நடத்தும்படி வற்புறுத்தமாட்டோம். தமிழ் அர்ச்சனையை விரும்பும் கோவில்களுக்கு ஏற்பாடு செய்துகொடுப்போம்.

கோவில் நிலங்களில் இருந்து நெல் குத்தகை சரியாக வருவதில்லை. நல்ல முறையில் குத்தகை வசூலிப்பது பற்றி பரிசீலனை செய்து வருகிறேம்.

இந்துக் கோவில்களில் பிறமதத்தினர் நுழைவதற்கு அனுமதி இல்லை. அரசாங்க கொள்கை எவ்வாறு இருந்தாலும் இது போன்ற மக்கள் பிரச்னைகளை பக்தர்களின் கருத்தில் கவனிக்கப்படும்.

---

### தமிழ் நாட்டில்

## இந்திராவுக்கு ஆதரவு கூடுகிறது

சென்னை, ஜன. 23

தமிழ்நாடுசட்டசபைகாங்கிரஸ் உறுப்பினர்களில் 6 பேர் இந்திரா காங்கிரசில் சேருவார்கள் என்று தெரிகிறது

தமிழ்நாடு சட்டசபையில் உள்ள காங்கிரஸ் உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை 48

சட்டசபை காங்கிரஸ் (சின்டிகேட்) கட்சிகூட்டத்தை அண்மையில் சின்டிகேட் கூடியிருந்தது.

அதில் 40 பேர் கலந்து கொண்டார்கள். 8 பேர் கலந்து கொள்ளவில்லை.

கலந்து கொள்ளாதவர்களில் கீழ்க்கண்ட 6 பேர் ''இந்திரா காங்கிரசில்'' சேருவார்கள் என்று தெரிகிறது

பூவராகன் (பழையமந்திரி)

சேனதிபதிகவுண்டர் (காங்கயம் தொகுதி)

விஜயராஜ் (திருவண்ணமலை)

வெங்கடாசல தேவர் (வேதாரண்யம்)

கனகசபை (சிதம்பரம்)

திப்பையா (மேட்டுப்பாளையம்)

மேற்கண்டவர்கள் தவிர 2 சுயேட்சை உறுப்பினர்களும் இந்திரா காங்கிரசில் சேருவார்கள் என்று கருதப்படுகிறது.

எனவே சட்டசபையில் ''இந்திரா காங்கிரஸ்'' கட்சி 8 உறுப்பினர்களைக்கொண்ட தனிக்கட்சியாக இயங்கும்.

---

மென்று கோரி கிராமச் சங்கத் தலைவர் எழுதிய கடிதத்திற்கு மேற்கண்டவாறு பதிலளித்த திரு. கதிரவேலுப்பிள்ளை இராச வீதியில் பஸ்சேவை நடத்துவதற்கு இ. போ. சபை சகல விதமான ஏற்பாடுகளும் செய்து ஒரு பஸ்ஸைக் கூட ஒதுக்கியதற்காகவும் அதற்கிடையில் வெள்ளம் வந்து வீதியைப் பாழாக்கவே ரூபா 40,000 ஒதுக்கப்பட்டு வீதி திருத்த வேலைகள் நடைபெற்று வருவதாகவும் இவ் வேலைகள் முடிந்தவுடன் நிச்சயம் பஸ்சேவை நடைபெறுமெனவும் தமது கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார்

---

## தலைமை ஆசிரியர் சங்கக்கூட்டம்

புத்தூர், வெள்ளி

கோப்பாய் வட்டார தலைமை ஆசிரியர் சங்கக் கூட்டம் சென்ற புதன் கிழமை அச்சுவேலி ஸ்ரேஷன் பாடசாலையில் வட்டார வித்தியாதிகாரி திரு வி. சண்முநாதன் தலைமையில் நடைபெற்றது.

கஷரோக நிவாரணம் பற்றி கோப்பாய் பகுதி சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். சோமசுந்தரம் உரையாற்றினர்.

அவர் பேசுகையில் 'கோப்பாய் வட்டாரத்திலுள்ள சில பாடசாலை தலைமை ஆசிரியர்களும் கஷரோக நிவாரண சம்பந்தமாக சுகாதாரப் பகுதியினருடன் ஒத்துழைக்குமாறும் இவர்களின் ஒத்துழைப்பு இப்பகுதியிலுள்ள மக்களுக்கு நன்மை உண்டாகும் என்றும் கூறினர்.

அடுத்து கூட்டத்துக்கு தலைமை வகித்த வட்டார வித்தியாதிகாரி திரு. வி. சண்முகநாதன் பேசுகையில் ஆசிரியர் வேலைமதிப்பீடு, நேரசூசி, புள்ளி தயாரித்தல், விளையாட்டுப் போட்டி இரண்டாம் வகுப்பிலிருந்து ஏழாம் வகுப்புவரை சேர்த்தல், பாடசாலை நிர்வாகம் ஆகியவை பற்றி கூறினர்.

---

## புதிய நிர்வாகிகள்

புத்தூர், வெள்ளி

அச்சுவேலி பத்தமேனி பயிர்ச் செய்கைக் குழு புதிய நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்:

தலைவர்: கே. வி. கனகசபாபதி, காரியதரிசி: எஸ். வி. வேலுப்பிள்ளை, தனதிகாரி: து. சித்திவிளுயகமூர்த்தி. 12 பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

---

திரு. க. சதானந்தன், செயலாளர் திரு. க. குணேந்திரதாசன் ஆகியோரால் வெளியிடப்பட்ட இவ்வறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது:

வேலையில்லாப் பிரச்னை ளது கோரி கையை வலியுறுத்தினர் ஆகவே நாமும் எமது போராட்டத்தை இன கட்சி பாகுபாடின்றி அவர்களது போராட்டங்களுடன் இணைத்து முன்னெடுத்துச் செல்வோம்',

---

## "சனசமூக நிலையங்களை சுயநலத்துக்கு பாவிக்காதீர்"

உடுப்பிட்டி, வெள்ளி

'நாட்டு மக்களிடையே வேற்றுமைகள் இருப்பது கூடாது. இதனலேயே சமூகங்களிலே குறைபாடுகள் காணப்படுகின்றன. மக்களிடையே ஒற்றுமையையும், ஐக்கியத்தையும் பொது ஸ்தாபனங்கள் மூலம்தான் ஏற்படுத்தமுடியும். உள்ளூராட்சி வாரம் இத்தகைய மாபெரும்பணியை நடைமுறையில் செய்ய வைத்துள்ளது இத்திட்டத்திற்குக் கிடைத்துள்ள மகத்தான வெற்றியாகும்'.

இவ்வாறு வடமராட்சி சனசமுகநிலையங்களின் சமாஜச்செயலாளர் திரு. சி. செல்லையா உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு வடமராட்சிப்பகுதி சனசமூக நிலையங்கள், வாசிகசாலைகளுக்கிடையே நடாத்தப்பட்ட விளையாட்டு, கலைப் போட்டிகளுக்குத் தலைமை வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் பகலில் விளையாட்டுபோட்டிகளும், மண்டபத்தில் மாலையில் கலைப் போட்டிகளும் நடைபெற்றன. திரு. சி. செல்லையா தனது தலைமையுரையில் தொடர்ந்து கூறியதாவது:

'இத்தகைய விழாக்களைக் கொண்டாடுவது என்பதுசுலபமானதல்ல. பல்வேறு அபிப்பிராயங்களைக் கொண்டவர்களையும், போட்யாளர்களையும் திருப்திப்படுத்த வேண்டியுள்ளது. இப்போட்டிகளில் ஒத்துழைத்து இவ் வியக்கத்தின் வெற்றியில் பங்குகொண்ட விளையாட்டுக்கழகங்களையும் சனசமுக நிலையங்களையும் அதிகாரிகளையும் நாம் பாராட்டாமல் இருக்க முடியாது.

சனசமூக நிலையங்கள்நாட்டின் பொருளாதார அபிவிருத்தியில்கொண்டுள்ளபங்கு மகத்தானது. சுயநலத்திற்காகவோ, போலிக் கௌரவத்திற்காகவோ சனசமூக நிலையங்களைப் பயன்படுத்தக் கூடாது சமூக சேவையில் நேர்மையுடன் செயல்புரிய வேண்டும்' உள்ளூராட்சி வாரம் கொண்டாடப்படுவதின் நோக்கமும் இதுவேயாகும்.

பிரதம விருந்தினராகக்கலந்துகொண்ட உள்ளூராட்சி அமைச்சின் விசாரணை அதிகாரி திரு. ஜே. ஈ. வருணகுலசிங்கம் பேசும்போது, கல்வி, விளையாட்டு, சிரமதானம் முதலிய துறைகளில் நாட்டுமக்களைத் தீவிரமாக ஈடுபடுத்துவதே அரசாங்கத்தின்திட்டமாகும். இத்துறைகளில் மக்களை ஊக்கும்முகமாக இத்தகைய விழாக்கள் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளன. வடமராட்சி மக்கள் விவசாயம், சிரமதானப் பணிகளில் காட்டிவரும் அக்கறை பாராட்டிற்குரியது' என்று கூறினர்.

வடமராட்சி விளையாட்டு உத்தியோகத்தர் திரு. எஸ். கே- கார்த்திகேசு, கலைக்குரிசில் திரு கந்தவனம். (ஐயாமாமா), நடிகமணி திரு. வே. கனகசபை, பத்திரிகை நிருபர் திரு. ஜே. ஜெயக்குமார் ஆகியோரின் சேவைக்கும் விழாவில் பாராடடுத் தெரிவிக்கப்படடது.

---

## இன்று சங்கீதக் கச்சேரி

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம்சங்கீதசபையின் ஆதரவில் இன்றுமாலை 6-30 மணிக்குயாழ்ப்பாணம் கலை மன்ற மண்டபத்தில் சங்கீத கலாநிதி சித்தூர் சுப்பிரமணிய பிள்ளையின் சங்கீதக் கச்சேரி நடைபெறும். (கா. நி)

---

## ப. நோ. கூ. சங்கத்தில் திருட்டு

வேலணை, வெள்ளி

சுருவில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில். நள்ளிரவு வேளையில் புகுந்த கள்வர் சுமார் 700 ரூபா பெறுமதியான புடவைகளைக் களவாடி விட்டதாக பொலிசில் முறையிடப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக எவரும் இதுவரை கைது செய்யப்படவில்லை. கைரேகை நிபுணர்கள் அடையாளங்களை பதிந்து சென்றுள்ளனர். ஊர்காவற்றுறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி திரு. இராஜையா புலன்விசாரணையில் ஈடுபட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

எல்லா ஜீவராசிகளின் ஒருமைப்பாடே அஹிம்சையின் அடிப்படையாகையால், ஒன்றின் தவறு மற்றெல்லாவற்றையும் பாதிக்காமல் இருக்கமுடியாது.

— மகாத்மாகாந்தி.

# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 889.

யாழ்ப்பாணம் சௌமிய வருஷம் தைமாதம் 11-ந் திகதி (24-1-70)


## காங்கிரஸ் மகாநாடு

சாவகச்சேரியில் நடைபெற்ற அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் மாநாடு முடிவடைந்திருக்கிறது. காங்கிரஸ் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் தமது தலைமையுரையில் பல முக்கிய விஷயங்களைத் தெரிவித்திருக்கிறார். பல தீர்மானங்களையும் மாநாடு நிறைவேற்றியிருக்கிறது. அடுத்த பொதுத்தேர்தல் நெருங்கும் சமயத்தில் இந்த மகாநாடு நடைபெற்றிருப்பதால் பொதுத்தேர்தல் பிரசாரம் மகாநாட்டில் கலந்திருந்தது வியப்பல்ல.

சிறுபான்மைத் தமிழர்களுக்கு ஆட்சிமன்றத்தில் பிரதிநிதித்துவம் அளிக்கப்படவேண்டிய அவசியத்தை மகாநாடு வலியுறுத்தியிருப்பதுடன் விரைவில் அமைக்கப்படவிருக்கும் தொகுதி நிர்ணயக் கமிஷன் முன் சாட்சியமளிக்கும்போது சிறுபான்மைத் தமிழர்களுக்கு பிரதிநிதித்துவம் கிடைக்கக்கூடிய வகையில் ஒன்றுக்கு மேற்பட்ட அங்கத்தவரைத் தெரிவுசெய்யக்கூடியவகையில் தொகுதிகள் சில இங்கு நிர்ணயிக்கப்படவேண்டுமென காங்கிரஸ் வற்புறுத்துகிறது. சிறுபான்மைத் தமிழர்களின் குறைகளை எடுத்துச் சொல்லி நிவர்த்தி காண்பதற்கு அவர்களுக்கு ஆட்சிமன்றத்தில் பிரதிநிதித்துவம் வேண்டியது அவசியம்தான். மக்கள் பிரதிநிதிகள்சபையில் ஒரு நியமன அங்கத்தவர் பதவியையோ மேல்சபையில் (செனட்) தெரிவுப் பிரதிநிதியாகவே சிறுபான்மைத் தமிழர் ஒருவரை நியமித்திருக்கலாம். இதற்காக எடுக்கப்பட்ட முயற்சிகளும் பயனளிக்கவில்லை. இந்தியாவில் ஹரிஜன மக்களுக்கு சட்டசபைகளிலும் ஆட்சிமன்றத்திலும் பிரதிநிதித்துவம் கிடைப்பதற்கு தொகுதிகள் ஒதுக்கப்பற்றிருக்கின்றன. ஒதுக்கப்பட்ட தொகுதிகள் தொடர்ந்திருக்கவேண்டுமா என்ற கேள்வி அங்கு சமீபத்தில் எழுந்தது. தொகுதிகளை ஒதுக்கியிருப்பதால் தீண்டாமை ஒழியமாட்டாதென்ற கருத்தைத் தொடர்ந்தே இக்கேள்வி எழுந்தது. ஆனாலும் இன்னும் சில காலத்துக்கு ஒதுக்கப்பட்ட தொகுதிகள் இருக்கத்தான்வேண்டுமென்று முடிவுசெய்யப்பட்டிருக்கிறது.

நமது நாட்டிலும் சிறுபான்மைத் தமிழர்களுக்கு ஆட்சிமன்றத்தில் பிரதிநிதித்துவம் கிடைப்பதற்கு தனித் தொகுதியோ ஒதுக்கப்பட்ட தொகுதியோ அமைக்கப்படவேண்டியது அவசியம் என்பதையும் இவ்விதம் செய்யாதவரை அவர்களுக்கு ஆட்சிமன்றத்தில் பிரதிநிதித்துவம் கிடைக்கவழியில்லையென்றும் கடந்தகால அனுபவங்களில் இருந்து தெரிந்துகொள்ளலாம்.

தீண்டாமையை நிரந்தரமாக ஒழிக்கவேண்டுமானால் சிறுபான்மைத் தமிழர்களுக்கென தனித்தொகுதி ஒதுக்குவதோ, அவர்களுக்கெனப் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்யக்கூடிய முறையில் தொகுதிகளைப் பிரிப்பதோ நல்லதல்ல. ஆனாலும் இப்போதுள்ளநிலையில் இப்படிச்செய்யாமல் அவர்களுக்கு ஆட்சிமன்றத்தில் பிரதிநிதித்துவம் கிடைக்காது என்றாலும் இந்தத் தொகுதி ஒதுக்குவது நிரந்தரமானதொரு ஏற்பாடாக இருக்கக்கூடாது.

தமிழ்க்காங்கிரஸ் பழம்பெரும் ஓர் அரசியல்கட்சி ஆற்றலும் அனுபவமுள்ள தலைவர்கள் அதிலிருக்கிறார்கள். இந்த நாட்டின் ஐக்கியத்துக்கும் தமிழ்மக்களின் முன்னேற்றத்துக்கும் காங்கிரஸ் மேலும் வழிகாட்டவேண்டும்.

## தேசிய அரசாங்கத்துக்கு

# வண. தனிநாயகம் அடிகள் சொன்னார்

# கடைசிக்கால வாழ்க்கைக்கு யாழ்ப்பாணத்தை விரும்புகிறேன்

# ஒன்பது மாகாணங்களுக்கும் ஒன்பது பல்கலைக்கழகம் தேவை

(காரியாலய நிருபர் 'திரு')

"இலங்கையிலுள்ள தமிழ் மாகாணங்களில் ஒன்றோ, இரண்டோ, மூன்றோ பல்கலைக்கழகங்கள் நிறுவவேண்டியது மிகமிக அவசியமாகும். அப்போது தான் தமிழ் ஆராய்ச்சி தொடர்ந்து செய்ய முடியும், ஒன்பது மாகாணங்களிலும் கூட ஒவ்வொரு பல்கலைக் கழகம் நிறுவ வேண்டிய தேவை இன்று எழுந்துள்ளது"

தமிழும் தமிழாராய்ச்சியும் பற்றிச் சொற்பொழிவு நிகழ்த்திய வண. தனிநாயகம் அடிகள் இக்கருத்தைத் தனது சொற்பொழிவின் பல இடங்களிலும் வலியுறுத்தினார்.

இச் சொற்பொழிவு நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. சொற்பொழிவுக்கு முன்னர் 4-வது தமிழாராய்ச்சி மாநாட்டை இலங்கையில் நடாத்துவது பற்றிய கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது.

தமிழ் அறிஞர்கள், எழுத்தாளர்கள், கல்லூரி அதிபர்கள், ஒய்வு பெற்ற அரசாங்க அதிகாரிகள், ஆசிரியர்கள், அரசியல் வாதிகள் பலரும் இக் கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.

தமிழாராய்ச்சிக் கழக இலங்கைக் குழுவைச் சேர்ந்த திரு. கே. ஸி. தங்கராஜா தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலிலும் சொற்பொழிவிலும் வண. தனிநாயகம் அடிகள் மேலும் பேசியதாவது:

4-வது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டை இலங்கையில் நடாத்தத் திட்டமிட்டுள்ளோம். யாழ்ப்பாண மக்கள் மத்தியில் இதன் கருத்தை வலியுறுத்தவே இக் கூட்டத்தை இங்கு ஏற்பாடு செய்ய வேண்டியுள்ளது.

தமிழ் பேசும் மக்கள் எந்த மதத்தைச் சேர்ந்தவர்களானாலும் இக் கருத்துக்கள் அவர்கள் மத்தியில் எழுச்சி மனப்பான்மையை ஏற்படுத்த வேண்டும். நாடு பூராவும் இது சம்பந்தமான கூட்டங்களை நாம் நடாத்திய போது அந்தாந்த ...

நிதி இல்லை. அலுவலகம் இல்லை. கழகத்துக்குச் சட்டங்கள் இல்லை. இதற்குத் தலைமை அலுவலகம் இப்போது தான் சென்னையில் அமைக்கப்பட்டு இயங்கி வருகின்றது.

1964-ம் ஆண்டில் கழகத்தின் ஆலோசனைக் கூட்டம் டெல்லியில் நடைபெற்றபோது 15 நாட்டு அறிஞர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டு இதன் கருத்துக்களைப் பரப்ப வேண்டிய, கழகத்தை வளர்க்க வேண்டிய, கருத்துக்களைச் சொன்னார்கள்.

இப்போது இத்துறை இலங்கையிலு பெரும் ஆர்வத்தையும் எழுச்சியையும் ஏற்படுத்தியுள்ளதை நாம் கண்கூடாகக் காணக் கூடியதாகவிருக்கின்றது.

இவ்வாறு நாம் ஆக்க பூர்வமான முயற்சிகளை மேற்கொள்தால் தமிழை நாம் வளர்ப்பதாக எண்ணுகின்றோம் அப்படியில்லை. அப்படி எண்ணிக் கொண்டு நம்மை நாம் தான் வளர்க்கிறோம். ஏனென்றால் தமிழ் ஏற்கனவேயே கடல் போலப் பரந்து விரிந்தது. இதனால் தமிழன் பெருமை உலக அரங்கில் ஏற்றம் பெறுகின்றது.

19-ம் நூற்றாண்டில் தமிழாராய்ச்சி வரலாற்றும் சின்னமானது பல அரிச் சுவடுகள், தமிழ் நூல்கள் அச்சுக் கண்டன. நாவலர் பெருமானது முயற்சிகள் தமிழ் மக்கள் மத்தியில் புதிய மலர்ச்சியையும் புத்துணர்ச்சியையும் உண்டாக்கியது. மேல் நாட்டவரும் கூட இதற்குக் காரணமாக இருந்தனர். சென்னைப் பல்கலைக் கழகம், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியும் கூட இத் துறையில் பெரும் பங்கு கொண்டவையாகும்.

இந்த எழுச்சியும், வளர் ...

இலங்கையின் தமிழ் மாகாணங்களில் ஒன்றோ, இரண்டோ, மூன்றோ பல்கலைக் கழகங்கள் அமைக்கப்பட வேண்டிய அவசியம் இன்று ஏற்பட்டுள்ளது. அப்போது தான் தொடர்ந்து தமிழாராய்ச்சி செய்ய முடியும். 9 மாகாணங்களிலும் கூட பல்கலைக் கழகங்களை நிறுவுவது சாலச் சிறந்தது.

பட்டப் படிப்புக்கு நிலைக்களனாக சிறந்த ஆராய்ச்சிக்கு உயர் பட்டப் படிப்பு அவசியமாகும் அப்போது தான் சகல துறைகளிலும் ஈடுபாடு ஏற்படும்.

வறுமை அகன்று தொழில் நிலையில், அரசியல் துறையில், விவசாய அபிவிருத்தியில் மாற்றமேற்படும் நாடுகளில் மாற்றம் வேண்டும். இலங்கையின் தமிழ் மாகாணங்களில் பல்கலைக் கழகங்கள் அமைக்க வேண்டிய அவசியமும் இதனாலேயே எழுந்துள்ளது.

தமிழ் இலக்கணம், தமிழ் இலக்கியத் துறைகளை மட்டுமன்றி ஏனைய துறைகளையும் ஆராயவேண்டும். அப்போது தான் பலவற்றையும் அறியவும் தொடர்பு வைக்கவும் வசதி ஏற்படும்.

ஹொங்கொங்கிலிருந்து வடக்கே கண்ணன், சிவன் சிலைகள் கண்டு பிடிக்கப்பட்டன. இது பற்றி பெருமாள் என்பவர் எழுதியுள்ளார்.

பிரஞ்சு ஆட்சியில் மேற்கிந்தியதீவில் மாட்டின் இக் குவடாகுப்ல் ஆகிய இரு சிறு தீவுகள் உண்டு அங்கு இன்றும் தமிழர்கள் பலர் வாழுகின்றார்கள் இவர்களை நான் சென்று சந்தித்திருந்தேன். முனுசாமி என்பவரது பெயர் மூன்சாமி என்றும் முருகப்பன் என்பவரது பெயர் முருகப்பான் என்றும் ஆங்கிலத் தொனியில் மாறியிருக்கின்றன.

இங்கு வசிப்பவர்கள் 80 வயதுக்குமேற்பட்ட தமிழர் ...

கடைசியாக தமிழாராய்ச்சி மாநாட்டை ஏன் ஆங்கிலத்தில் நடாத்துகின்றோம் என்பதற்கும் நான் இங்கு விளக்கம் கொடுக்கவேண்டிய நிலையிலுள்ளேன்

தமிழ் தெரியாத வெளிநாட்டவர் மத்தியில் தமிழின் மகத்துவத்தையும் தமிழர் பண்பாட்டையும் எடுத்துணர்தத் ஆங்கிலத்தில்தான் நடாத்தவேண்டியுள்ளது

முதலாவது மாநாடு மலேஷியாவில் நடைபெற்றபோது 25 நாட்டு பிரதிநிதிகளும் அறிஞர்களும் கலந்து கொண்டனர் இரண்டாவது மாநாடு சென்னையில் நடைபெற்றபோது 36 நாட்டுப் பிரதிநிதிகளும் அறிஞர்களும் கலந்துகொண்டனர் மூன்றாவது மாநாடு இவ்வருடம் பாரிஸில் நடக்கும்போது அமெரிக்க ஐரோப்பா மக்கள் கூடுதலாகக் கலந்து கொள்வர்

இதனால் மேல்நாடடு பத்திரிகைகள், பல்கலைககழகங்களில் தமிழ்பற்றிய மதிப்பும், ஈடுபாடும் அதிகரிக்கும் கடைசிக் காலத்தில் யாழ்ப்பாணத்திலிருந்தே தமிழ் ஆராய்ச்சி செய்யவிரும்பும் தனது ஆசையையும் தனிநாயகம் அடிகளார் இக்கூடடத்தில் எடுத்துச்சொன்னார்

திரு ச அம்பிகைபாகன் நன்றி தெரிவித்துப்பேசினார்

(கா நி)

......

## ஸ்டாலின் மகளுக்கு உரிமையில்லை

மாஸ்கோ, ஜன. 23

முன்னாள் சோவியத்தலைவர் ஸ்டாலினின் மகளான ஸ்வெட்லானா அல்லிலுயேலாவின் பிரஜாவுரிமையை சோவியத் ஆட்சித்தலைமைப் பீடம் ரத்து செய்துள்ளது.

நடத்தை மீறவின் காரணமாக செல்வி அல்லிலுயேவா சோவியத் குடியியல் உரிமை ...

# நாட்டிலும் நகரிலும்

தெருப்பாதுகாப்பு இயக்கம் என்பதாக ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தெருக்களைப் பாதுகாக்கும் இயக்கம் அல்லா அந்த வேலையை நமது பொது வேலைப்பகுதியார் எவ்வளவு திறப்படச் செய்துவருகிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டுமானால் ஐந்து முச்சந்தி தொடக்கம் வெள்ளாந்தெரு சந்திவரையுள்ள மானிப்பாய்ரோட்டைப் பார்த்து அறிந்துகொள்ளலாம்!

இந்த இயக்கம், தெருக்களில் போக்குவரத்து செய்யும் பிரயாணிகளும் சைக்கிள்வீரர்களும் மோட்டார் மன்னர்களும் ஒருவரோடொருவர் முட்டி மோதி தமக்கும் பிறருக்கும் பிராணசேதத்தை உண்டுபண்ணும் தொழிலைக்கட்டுப்பாடு செய்வதற்காக ஏற்பட்ட இயக்கம்.

வீதிவிபத்துக்களும் அவற்றால் உண்டாகும் மரணங்களும் ரொக்கட் வேகத்தில் அதிகரித்து வருகின்றன. ஜனத்தொகையைவிட வீதிகளில் நடமாடித் திரியும் பலவித வாகனங்களின் தொகை அதிகமாகிவிட்டதோ என்று சந்தேகிக்கும் அளவுக்கு மாட்டுவண்டி. சைக்கிள், கார், பஸ், லொறி, ட்ராக்டர் எல்லாம் பல்கிப் பெருகிவிட்டன, இந்தப் பெருக்கத்தை தடுப்பதற்கோ ஒரு வழியும் கிடையாது. ஆனால் அவை ஒன்றோடொன்று மோதி முட்டுவதைத் தடுக்கலாம். எப்படித்தடுக்கலாம் என்று கண்டு பிடித்து அதற்கேற்ற உபாயங்களைக் கையாளுவதே இந்தஇயக்கத்தின் நோக்கம்.

யாழ்ப்பாண நகரத்தைப் பொறுத்தவரையில் இங்கே விசாலமான வீதிகள் இல்லாதது ஒரு பெரிய குறை. ஜனநடமாட்டம் அதிகமாக உள்ள பெரியகடையைச் சுற்றியுள்ள தெருக்கள் பல எலிப்பொந்துகள்போலக் குறுகியிருக்கின்றன. முதலில் இக்குறையை நிவர்த்திக்க வழி தேடவேண்டும்.

இரண்டாவதாக பல தெருக்களுக்கு நடைபாதைகள் இல்லாததும் ஒரு குறைபாடு. எங்கேயாவது ஒரு தெருவில் நடைபாதை இருந்தாலும் பொதுமகாஜனங்கள் அதைப் பாவிக்காமல் நடுத்தெருவில் அன்னநடை போடுவதையே விரும்புகிறார்கள். நடைபாதைகள் இருந்தாலும் இல்லாவிட்டாலும் பலருக்குத் தெருக்களில் எப்படி நடந்துபோவதென்று தெரியாது. ஒரு குறிப்பிட்ட நோக்கமில்லாமல் ஏமலாந்திக்கொண்டு திரிபவர்களும், கடைத்தெருவைக் கடற்கரையென்று நினைத்து உலாத்துபவர்களும் மற்றவர்களும் தெருக்களை உபயோகிக்க வேண்டுமேயென்ற எண்ணம் இல்லாதவர்களும் அநேகர். தெருக்களை எப்படி உபயோகிக்கவேண்டும் என்று பொதுமக்களுக்குப் புத்தி புகட்ட வேண்டியது பொலிசாருடைய கடமை. வீதி விபத்துக்குள்ளாகிறவர்களில் முக்கால் வாசிப்பேர் தெருவில் நடந்து போகிறவர்களாதலால் இந்த விஷயம் மிகமுக்கியமானது.

விபத்துக்குள்ளாகிறவர்கள் நடை பிரயாணிகள் என்றால் அதற்குக் காரணமாயிருப்பவர்கள் பெரும்பாலும் மோட்டார்சாரதிகளும் பஸ் சாரதிகளுமே. இவர்களைப் பற்றிப் பலவிதமான குறைகள் கூறப்படுகின்றன. பலருக்கு சாரத்தியத்தில் போதிய அறிவும் அனுபவமும் இல்லையென்றும் இவர்கள் எப்படியோ தந்திரமாக லைசென்ஸ் பெற்றுவிடுகிறார்களென்றும் ஒரு பாரதூரமான புகார் பலகாலமாக இருந்து வருகிறது. பலருக்குச் சாரத்தியவிதிகளே சரியாகத் தெரியாது. இந்த விஷயத்திலும் பொலிசார் கொஞ்சம் விறைப்பாக இருந்து விதிகளுக்குமாறாக கார் பஸ் ஓட்டுபவர்களை தண்டிக்க வேண்டும். பலசாரதிகள் மதுபோதையில் தொழில் செய்வது உலகறிந்த விஷயம்.

ஜப்பானில் ஒரு சிற்பக்கலைஞர் மரத்தினால் புத்தர் சிலைகளை ஆயிரக்கணக்கில் உருவாக்கி அவற்றைப் பொலிசாருக்கும் மோட்டார் பஸ் சாரதிகளுக்கும் பிரபலஸ்தர்களுக்கும் தமது சொந்தச் செலவில் அனுப்பி வைத்திருக்கிறாராம். ஒவ்வொரு சிலையுடனும் 'உங்கள் குழந்தைகள் தெருவிபத்துக்களிலிருந்து காப்பாற்றப்பட வேண்டுமென்று புத்தரை வணங்குங்கள்' என்ற ஒரு துண்டையும் சேர்த்திருக்கிறார்.

இவரைப்போலவே இங்குள்ளவர்களும் சிந்தித்தால் வீதி விபத்துகளும் அகால மரணங்களும் வெகுவாகக் குறைந்து விடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டசபைகளிலும் ஆட்சி மன்றத்திலும் பிரதிநிதித்துவம் கிடைப்பதற்கு தொகுதிகள் ஒதுக்கப்பற்றிருக் முன்னேற்றத்துக்கும் காங்கிரஸ் மேலும் வழிகாட்ட வேண்டும்.

...க்கள் அவர்கள் மத்தியில் எழுச்சி மனப்பான்மையை ஏற்படுத்த வேண்டும். நாடு பூராவும் இது சம்பந்தமான கூட்டங்களை நாம் நடாத்திய போது ஆங்காங்கு காட்டப்பட்ட ஆர்வம் இதனை நிரூபித்துள்ளது.

இக் கழகம் மலேஷியாவில் முதலில் ஆரம்பிக்கப்பட்ட போது எம்மிடம்

...ட்டை யாழ்ப்பாணக் கல்லூரியும் கூட இத் துறையில் பெரும் பங்கு கொண்டவையாகும்.

இந்த எழுச்சியும், வளர்ச்சியும் 20-ம் நூற்றுண்டையும் சும்மா விட்டுவைக்கவில்லை. 20-ம் நூற்றுண்டு தமிழாராய்ச்சி புதுத்துறைகளில் ஈடுபாட்டை ஏற்படுத்தியது.

...கப்பான் என்றும் ஆங்கிலத் தொனியில் மாறியிருக்கின்றன.

இங்கு வசிப்பவர்கள் 80 வயதுக்குமேற்பட்ட தமிழர்களே சுமார் 5, 6 [illegible] தான் தமிழ் கதைக்கக்கூடிய தமிழர்களாக இருக்கிறுர்கள்.

இவர்களால் தமிழர்பண்பாடு கடல் கடந்தும் பிரகாசிக்கின்றது.

...சோவியத் ஆட்சித்தலைமைப் பீடம் ரத்து செய்துள்ளது.

நடத்தை மீறலின் காரணமாக செல்வி அல்லிலுயேவா சோவியத் குடியியல் உரிமைகளை இழந்து விட்டதாக சுப்ரீம் சோவியத் அறிக்கையொன்று கூறுகின்றது.

செல்வி சோவியத் யூனியனிலிருந்து வெளியேறி இப்பொது அமெரிக்காவில்வாழ்த்து வருகின்ருர். சமீபத்தில் தொலைக்காட்சி யொன்றில் செல்வி ஸ்வெட்லாஞ பேட்டியளித்த பொழுது "நான் எனது பாஸ்போட்டைக்கிழித்து விட்டேன். எனது குடியியல் உரிமைகளை நீக்கும்படி சோவியத்யூனியனுக்கு விண்ணப்பம் செய்திருக்கின்றேன். இனிஒருபோதும் ரஷ்யாவுக்குத் திருமப மாட்டேன்" என்று தெரிவித்திருந்தார்.

...நடுத்தெருவில் அன்னநடை போடுவதையே விரும்புகிறுர்கள். நடைபாதைகள் இருந்தாலும் இல்லாவிட்டாலும் பலருக்குத் தெருக்...

...குள்ளவர்களும் சிந்தித்தால் வீதி விபத்துகளும் அகால மரணங்களும் வெகுவாகக் குறைந்து விடும்.

—வழிப்போக்கன்

# தேசிய அரசாங்கத்துக்கு உபசபாநாயகர் புகழ்மாலை

புலோலி, வெள்ளி

"ஒருலட்சம் பேர் வாழும் இந்த வடமராட்சியில் இரண்டு காரியாதிகாரி கந்தோர் நிறுவப் படவேண்டுமென்பது எனதுநெடுநாள் ஆசை. தேசிய அரசாங்கத்தில் அங்கம்வகிக்கவேண்டிய ஓர் சந்தர்ப்பம்கிடைப்பதிஞல் வடமராட்சிக்கு இரண்டு காரியாதிகாரி கந்தோர் நிறுவப்படவேண்டுமென நான் உள்நாட்டு அமைச்சரை வற்புறுத்தியதின்பேரில் வடமராட்சிக்கு தெற்கு, மேற்கு காரியாதிகாரி அலுவலகத்தைத்திறக்கும்படி உத்தரவிட்டார் அமைச்சர். அவருக்கு எமது பகுதி மக்கள் சார்பில் மனப்பூர்வமான நன்றி.

வதிரியில் காரியாதிகாரி அலுவலக திறப்பு விழாவில் உடுப்பிட்டி ஆட்சிமன்ற உறுப்பினரும் உபசபாநாயகருமான திரு. எம்.சிவசிதம்பரம் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு பேசுகையில் மேற்கண்டவாறு கூறிஞர்.

அவர் மேலும் கூறியதாவது: 'சாதி' மத பேதங்களை உண்டாக்கி மக்களிடத்தில் குரோதங்களை தேசிய அரசாங்கம் வளர்க்காமல் அனைவரையும்ஒன்றுசேர்த்துநாட்டின் வளர்ச்சிக்கு பாடுபடவைக்கின்றது. இதுதான் தேசிய அரசாங்கம் தனது முதலாவது இலட்சியமாகக் கொண்டு உழைத்ததன் காரணமாக இப்படியான திறப்பு விழாவில் எல்லோரும் ஒன்றுதிரண்டுநடத்தமுடிகின்றது. தேசிய ஒற்றுமை ஏற்படுத்துவதன் மூலம்தான் நாடு சுபீட்சத்திற்கு வழிகாண முடியும் என்பதை நாம் மனதில்கொண்டு மேற்படி புதிய காரியாதிகாரி கந்தோரை சிறப்பாக நடத்த நாம் ஒத்துழைக்கவேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

புதிய காரியாதிகாரி அலுவலகம் அமைந்திருக்கும் இடத்தால் பஸ் போக்குவரத்து குறைவாக இருப்பதால் மேற்படி கந்தோருக்கு மக்கள் இலகுவாக வந்து போவதற்கு. இ. போ. ச. அதிகாரிகளுடன் கதைத்து ஆவன செய்வேன் எனவும் உபசபாநாயகர் மேலும் தெரிவித்தார்.

வடமராட்சி காரியாதிகாரி திரு. எஸ். ஜெயகாந்தா பேசுகையில், 'இக் காரியாலயம் இம்மாதம் முதலாம் திகதி தொடக்கம் இயங்கிவந்தாலும்இன்றைய நன்ஞளிலே சம்பிரதாய முறைப்படி அரசாங்க அதிபரால் திறந்துவைக்கப்பட்டிருக்கின்றது என்ருர்.

இவ்விழாவுக்கு சமாதான நீதவான் திரு. எஸ். பி. தேவசகாயம் தலைமைவகித்தார். இவ்விழா ஆரம்பமாவதற்கு முன் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் எவ். ஸி. பீற்றஸ், உடுப்பிட்டி எம் பி சிவசிதம்பரம் வதிரி சந்தியிலிருந்துமாலைபோட்டுவரவேற்று காரியாதிகாரி கந்தோர் வரையும் மேளவாத்தியங்களுடன் அழைத்துசெல்லப் பட்டார். மற்றும் திரு. நீ. அகஸ்றீன் (இளைப்பாறிய கல்வி இலாகா எழுதுவினைஞர்), திரு. ஆ. தாமோதரம் பிள்ளை (கரவெட்டி மேற்கு கிராம சேவையாளர்) ஆகியோர் சொற்பொழிவாற்றினுர்கள்.

— —

## "ஆலயங்களைப் புதுபிக்கவேண்டும்"

மாவிட்டபுரம், வெள்ளி

"புதிது புதிதாக ஆலயங்களை கட்டிஞல் மட்டும் போதாது; அழிந்து போகும் பழம் ஆலயங்களைபுதுப்பிக்க வேண்டியது சைவர்களின் கடமை".

இவ்வாறு தெல்லிப்பழை கிழக்கு பெரிய கலட்டி வயிரவர் ஆலயப்பரிபாலன சபைக்கூட்டத்தில் கலந்துரையாற்றிய முன்னுள் ஆலய பரிபாலகர் திரு. வி. விஜயகுமார் கூறிஞர்.

ஆலய மண்டபத்தில் நடந்தஇக்கூட்டத்தில் திரு. விஜயகுமார்மேலும்பேசுகையில் இன்று எம்மிடையே புதிய ஆலயங்களை கட்டவேசைவர்கள் விரும்புகிருர்கள் ஆஞல் நாம் இப்படிச்செய்தால் பழம் பெரும் ஆலயங்கள் அழிந்து போகும். இத்துடன் ஆலயங்களின் வரலாறும் அழிந்து போய்விடும். இதஞல் சைவர்களின் வரலாறு என்ன என்பதை எமது வருங்கா சந்ததி அறிய முடியாது" என்ருர்.

# கூட்டுறவு முறையில் ஆரம்பமான முதல் மின்தறி நிலையம் இது

வடமாகாணத்தில் முதலில் கூட்டுறவு அடிப்படையில் ஆரம்பிக்கப்பட்ட வலி- மேற்குப் ப. நோ. கூ. சங்கங்களின் சமாஜ மின்தறி நிலையத்தை சங்கானையில் இன்று காலை கைத்தொழில் கடற்றெழில் அமைச்சர் கௌரவ பிலிப் குணவர்த்தஞ திறந்துவைக்கும் வேளையில் இதுபோன்ற பல கைத்தொழில்கள் மேலும் தமிழ்ப் பிரதேசங்களில் ஸ்தாபிக்கப்படவேண்டுமென்பதைப் பொருளாதாரக் கண்கொண்டு நோக்கும் எவரும் ஒத்துக்கொள்வார்கள் என்பதில் சந்தேகமில்லை.

யாழ் கூட்டுறவு வங்கியின் பணஉதவியுடன் 9 1/4 லட்சம் முதலீட்டுடன் ஆரம்பிக்கப்பட்ட இம்மின்தறி நிலையம் 75 ஊழியர்களுக்கு வேலைவாய்ப்பளிப்பதுடன் அதன் எதிர்காலமும் சுபீட்சமும் சமாசத்திஞல் தயாரிக்கப்படும் தயாரிப்புகளுக்குப் பொதுமக்கள் கொடுக்கும் ஆதரவில்தான் தங்கியுள்ளது. எதற்கும் வெளிநாட்டை எதிர்பார்த்துக்கொண்டிருந்த நாம் இன்று நமது நாட்டிலே நம்மவர்களால் தயாரிக்கப்படும் துணிகளை அணிவதிலும் அதன் நயத்தை அனுபவிப்பதிலும் பெருமையுடைய வர்களாயிருக்கின்ருேம்.

### தனியார்துறையினர் முதலீடு

நமது நாடு மற்றைய நாடுகளுக்கு எவ்விதத்திலும் பின்தங்கியதல்ல வென்பதையும் -செய்யும் தொழில் திறமையும் செல்வமும் எங்களிடமுமுண்டுஎன்பதற்கும் இதுபோன்ற கைத்தொழில்கள் ஓர் எடுத்துக்காட்டாகவும் மேலும் பல தனியார் துறையினர் நமது பகுதிகளில் முதலீடு செய்வதற்கும் உதவியாக அமைந்துள்ளது. அரசாங்கம் எடுத்துக்கொண்ட முடிவின் காரணமாகப் பல கைத்தொழில்கள் நமது மக்களின் தேவைகளைப் பூர்த்திசெய்து கொண்டுவருகின்றன. எனினும் வடமாகாணத்தைப் பொறுத்தமட்டில் அரசாங்கத்திஞல் ஸ்தாபிக்கப்பட்ட சிமெந்து கூட்டுத்தாபனம், பரந்தன் ரசாயன தொழிற்சாலை ஒட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலை முதலியவற்றைத் தவிர வேறு குறிப்பிடத்தக்க தொழிற்சாலைகள் வடபகுதியில் இல்லாததால் படித்த வாலிபர்கள் வேலை பெறுவதற்குள்ள வாய்ப்பு கட்டுப்படுத்தப் பட்டுள்ளது. இதனை மனதில் கொண்டு பணமுதலீடுசெய்யக்கூடிய கைத்தொழிலதிபர்கள் தயங்காது புதிய கைத்தொழில்களை ஆரம்பித்தால் நாடு முன்னேற்றமடைவதுடன் வேலையில்லாத் திண்டாட்டமும் ஓரளவு குறையக்கூடியதாக இருக்கும்.

### விற்பனை சந்தையில் சிரமமில்லை

வலி-மேற்கு மின்தறிநிலையத்தில் தயாரிக்கப்படும் துணிவகைகள் போல இலங்கையின் வேறு இடங்களிலும் ரேயோன் போன்ற செயற்கை நூல்கள் உபயோகிக்கப்பட்டுத்துணிகள் செய்யப்படுகின்றன. இவற்றில் அதிகமாஞேர் தனிப்பட்ட தொழிலதிபர்களாவர். இவர்களுக்குத் தாங்கள் தயாரிக்கும் பொருட்களை விற்பனை செய்வதிலும் சந்தை ஒன்றை ஏற்படுத்திக் கொள்வதிலும் அதிகம் சிரமமில்லை என்றே கூற வேண்டும். இவர்களில் பெரும்பாலாஞேர் தலைசிறந்த பிரபல்யமான புடைவை விற்பனையாளர்களாயிருப்பதாலும் அத்துறையில் அதிகம் அனுபவமிருப்பதாலும் தயாரிக்கப் பட்ட பொருள்கள் தொழிற்சாலைகளில் தேங்கி முதலீட்டை தடைசெய்யக்கூடிய சந்தர்ப்பம் இருக்க முடியாது. இக்காரணங்களிஞல் கூட்டுறவு அடிப்படையில் கைத்தொழில்களை ஆரம்பிக்கும் கூட்டுறவு நிறுவனங்கள் செலவில் பின்தங்கவேண்டியநிலைமை ஏற்படுகின்றது. எனவே அரசாங்க அனுசரணையுடன் இயங்கும் கூ. மொ. வி., சலுசலா போன்ற வர்த்தக ஸ்தாபனங்கள் கூட்டுறவுத்தாபனங்களின் தயாரிப்புகளை கொள்வனவு செய்து அவற்றிற்கு ஊக்கம் கொடுப்பது சிறந்த வழியாகும்.

இலங்கையைப் பொறுத்த வரையில் இதுபோன்ற ரேயோன் செயற்கை நூல் உற்பத்திப் பொருட்கள் வருடமொன்றுக்கு 20 கோடி தேவைப்படுகின்றன. தற்பொழுது 9 கோடி செயற்கைப்பட்டு தயாரிப்புகளே. எல்லாமாக இலங்கையில் உற்பத்திசெய்யப் படுகின்றன. எனவே தற்பொழுது உற்பத்திசெய்யப்படும் பொருட்கள் இலங்கையின் சுயதேவையை பூர்த்திசெய்ய முடியாமல் இருக்கின்றது.

இலங்கையில் இயங்கும் பெரும்பாலான கைத்தொழில் ஸ்தாபனங்களுக்கு அத்தியாவசியமான மூலப்பொருட்கள் பிறநாடுகளில் இருந்தே இறக்குமதிசெய்யப்படுகின்றன சில காலங்களில் ஏற்படுகின்ற தவிர்க்க முடியாத இடையூறுகளிஞல் மூலப்பொருட்கள் பெறுவதில் சிரமம் உண்டாகின்றது. இதஞல் எமது ஸ்தாபனத்தின் துணிவகைகளுக்கு ஆதாரமான நூல்கள் இங்கு உற்பத்திசெய்யப்படாமையிஞல் தாபனங்களின் தொழில்கள் பாதிக்கப்படுகின்றன. இந்த நிலை மாறி நமது நாட்டிலேயே கைத்தொழில் ஆக்கங்களுக்கான மூலப் பொருட்களை அரசாங்கம் உற்பத்திசெய்து தொழில் வளர்ச்சிக்கு உதவவேண்டியது முதற்கடஞகும்.

—எஸ்.கே.ரி.

## தேசிய சுவீப்

(I-ம் பக்கத் தொடர்ச்சி)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 14 | V | 0900 | 38 | H | 0929 |
| 13 | K | 0648 | 41 | B | 0682 |
| 12 | U | 0325 | 03 | J | 0980 |
| 20 | G | 0596 | 16 | T | 0442 |
| 41 | G | 0316 | 26 | U | 0507 |
| 09 | R | 0341 | 10 | K | 0561 |
| 06 | K | 0705 | 35 | R | 0199 |

(இவை உறுதிப்படுத்தப் படவேண்டியவை)

## காவலாளியை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

காரி ஒருவர் நேற்றுத் தெரிவித்தார்.

அரசாங்க ஊழியர்கள் கடமையிலிருக்கும்போது தாக்கப்பட்டதாக புகார்கள் கிடைத்தால் தாக்கியவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நேற்று சகல பொலிஸ் நிலையங்களுக்கும் வடபகுதி பொலிஸ் சுப்பிரின்டன் திரு. ஆர். சுந்தரலிங்கம் உத்தரவிட்டார். (கா. நி.)

# 'சுதந்திர தினத்தை பகிஷ்கரிக்க வேண்டும்"

## தமிழர்சுயாட்சிகழகம் வேண்டுகோள்

மண்டைதீவு, வெள்ளி

எதிர்வரும் பெப்ரவரி மாதம் 4-ம் நாள்நடைபெறவிருக்கும் "சுதந்திரதினத்தைப்பகிஷ்கரிக்குமாறும்இந் நாளை துக்கதினமாகக் கருதுமாறும் தமிழர் சுயாட்சிக் கழகம் கேட்டுக்கொண்டுள்ளது. தனது கிளைகளுக்கு விடுத்துள்ளவேண்டுகோளில் மேலும் அது தெரிவித்துள்ளதாவது;

"அடுத்தமாதம் 4-ம்திகதி சுதந்திரதினம் என்ற பெயரில் இலங்கை அரசாங்கத்திஞல் கொண்டாடப்படும் கேளிக்கைக் கூத்தை தமிழினம் தொடர்ந்தும் பகிஷ்கரிக்கவேண்டும் என்பது எம் கழகத்தின் முடிவாகும். 1956-ம்ஆண்டிலிருந்து இந்நாளைதமிழினம் தொடர்ந்து துக்கதினமாகவே கருதி வந்துள்ளது. தமிழினத்தின் சுதந்திரத்தை, சுதந்திரம் என்ற போர்வையில் பறித்தெடுத்த இந் நாளைத் தமிழ்மண்ணில் கொண்டாடமுடியாத நிலை இருந்துவந்தது ஆஞல் எமது தமிழ் அரசியல் கட்சிகளின் பூரண ஒத்துழைப்புடன் ஆட்சியாளர்கள் தமிழ் மண்ணில் மகிழ்ச்சிக் கொண்டாட்டம் நடத்தியதை தமிழ்மக்கள் யாவரும், உணரவேண்டும். விட்டுக் கொடுப்பவர்கள் பின்னலே தமிழினம் செல்லவேண்டும் என்ற நிலையில்லாது எமது இனம் சுய நிர்ணய உரிமை பெறும்வரை நாம் இந்நாளை கரிநாளாகவே கருதவேண்டியவர்களாக இருக்கின்ருேம்.

எமக்குக்கிடைக்கவேண்டிய இத்தனை உரிமைகளும் நாளுக்கு நாள் பறிக்கப்படுவதுடன் எமது இனமும் அழிக்கப்பட்டு வருவதையே நாம் காண்கிருேம். எனவே எதிர்வரும் சுதந்திர தினத்தில் தமிழ்மக்கள் எவரும் கலந்துகொள்ளாது இத்தினத்தை துக்கதினமாக கருதி நடக்கவேண்டுமென்று அறிவித்தல்விடுத்துள்ளது"

## பல்கலைக்கழக ..

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

பயன்படுத்தவேண்டுமென்றும் கூறிஞர்.

நள்ளிரவு 12 மணிவரை நடந்த இக்கூடடத்தில் திருவாளர்கள் வீ ஆனந்தசங்கரி எம் மோதிலால்நேரு எஸ் ஸ்ரீபாஸ்கரன் என் ரி சிவஞானம் என் சிவனேசன் ஆகியோரும் பேசிஞர்கள்.

# மகாவலிக்கு 17கோடி 20 லட்சம் கடனுதவி

கோட்டை, வெள்ளி

மகாவலிகங்கை திசை திருப்பும் வேலைக்கு உலக வங்கி 17 கோடியே 20 லட்சம் ரூபா வழங்கியுள்ளது. இத்தகவலை இன்று கொழும்பில் நடைபெற்ற மகாவலி திசைதிருப்புவது சம்பந்தமான கூட்டமொன்றில் காணி நீர்ப்பாசன அமைச்சின் நிரந்தரக்காரியதரிசி திரு. ஸ்ரீகாந்தா தெரிவித்தார்.

# யாழ். வை. எம். சி. ஏ. 'பாட்மின்டன்சுற்றுப்போட்டி

யாழ்ப்பாணம், சனி

யாழ் மாவட்ட பாட்மின்டன் விளையாட்டுக்கழகம் நடாத்தும் பாட்மின்டன் சுற்றுப்போட்டி இம்மாதம் 25-ம் திகதி முதல் 30-ம் திகதிவரை நடைபெறவிருக்கின்றது.

இப்போட்டி யாழ்ப்பாணம் வை. எம். சி. ஏ யில் நடைபெறும். ஆண்கள் பிரிவில் 16 வயதுக்குட்பட்டவர்கள், 14 வயதுக்குட்பட்டவர்கள், 12 வயதுக்குட்பட்டவர்கள்எனவும், பெண்களிலும் இதே போலவும் 6 பிரிவாகப் போட்டிகள் நடைபெறும்.

25-ம் திகதி முதல் 27-ம் திகதி வரை பட்மின்டன் பயிற்சி நடாத்தப்படும். 28-ம் திகதி முதல் 30-ம் திகதிவரையே சுற்றுப் போட்டி நடாத்தப்படும்.

பல்வேறு கல்லூரிகள் இதுவரை விண்ணப்பித்துள்ளதாகவும் மேலும் விண்ணப்பங்கள் கோரப்படுவதாகவும் மேற்படி கழகத் தலைவரான, உதவிஉணவுக்கட்டுப்பாட்டு அதிகாரி திரு. எம். வீரசிங்கம் தெரிவித்தார். (கா. நி.)

## மரண அறிவித்தல்

சரவணமுத்து தம்பு முன்னுள் அச்சுவேலி அமெரிக்கன் மிஷன் பாடசாலைத் தலைமை ஆசிரியர் காலமாகிவிட்டார். அவரின் மரணச் சடங்கு நாளை (24-1-70) முற்பகல் 8 மணிக்கு தெல்லிப்பளை மிஷன் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். முல்லாத்தனை, தெல்லிப்பளை. 1791

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு ஜனவரிமாதம் 24-ம்திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org